Registered as a Newspaper | பக்கங்கள் 04 | விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELAANATHAM | மக்கள் தினசரி | Peoples Daily

நாதம் 04 | திருவள்ளுவர் ஆண்டு 2024 | ஆவணி 19 | [04-09-1993] | சனிக்கிழமை | ஓசை 198

Y.M.C.A.

## அரச ஊழியர் மரணம் குறித்து ஜனாதிபதிக்கு மகஜர் அனுப்பிவைப்பு

கடந்த மாதம் இறுதிப்பகுதியில் இரு அரசாங்க ஊழியர்கள் இராணுவத்தினரின் கண்மூடித்தனமான தாக்குதல்களினால் கொல்லப்பட்டதைக் கண்டித்து அரசாங்கபொது சேவைச் சங்கத்தின் யாழ். கிளை ஜனாதிபதிக்கு மகஜர் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது. மேற்படி கொல்லப்பட்ட அரசாங்க ஊழியர்களுக்கான இரங்கல் கூட்டம் நேற்று யாழ். செயலகத்தில் நடைபெற்றபோது இந்த மகஜர் யாழ். அரசாங்க அதிபர் ஊடாக ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்டது. யாழ். மாவட்ட அரசாங்க அதிபரின் பரிபாலனத்தின் கீழ் உள்ள அரச ஊழியர்களான சி. விசாகமூர்த்தி, க. நவரட்ணம் ஆகியோர் கடந்தமாத இறுதிப்பகுதியில் அரசாங்க படைகளின் விமானத் தாக்குதலாலும் (சுழிபுரம்) ஷெல் தாக்குதலாலும் (தெல்லிப்பழை) கொல்லப்பட்டுள்ளனர். வேதனைக்குரிய இச்செயலை வன்மையாக கண்டிப்பதுடன், எமது ஆழ்ந்த கவலையையும் தெரிவிக்கின்றோம். (4 ஆம் பக்கம் பார்க்க)

# ஆறு மாத காலம் தொடர்ச்சியாக யுத்தம்; புலிகளுக்கு எதிராக நடத்துவதற்கு முடிவு!

## சமரசத்திற்கு இடமில்லையாம் சிங்கள நாளேடு தகவல்

(கொழும்பு)

வடக்கு-கிழக்குப் பகுதியில் அடுத்த ஆறுமாதங்களுக்கு விடுதலைப்புலிகளுக்கு எதிராக கடும் இராணுவ நடவடிக்கை தொடர்ந்து மேற்கொள்ள இராணுவம் தீர்மானித்துள்ளதாக லங்கா தீப எனும் சிங்கள தினசரி செய்தி வெளியிட்டுள்ளது. இக் காலப்பகுதியில் விடுதலைப் புலிகளுடன் எந்தவிதமான சமரச முயற்சிகளையும் மேற்கொள்வதில்லை என அரச வட்டாரங்களிலும், இராணுவ வட்டாரங்களிலும் முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இந் நிலைப்பாடு தொடர்பாக எதிர்க்கட்சி தலைவர்களுக்கு விளக்கமளிப்பதற்காகவும், மதத் தலைவர்களுக்கு நிலைமையை எடுத்துக்கூறவும் படை அதிகாரிகள் நால்வர் கொண்ட இராணுவக் குழு ஒன்றும் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளதாக அப்பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

அடுத்த ஆறுமாத காலத்தில் விடுதலைப் புலிகளுக்கு எதிராக இராணுவ நடவடிக்கையை மேற்கொள்வதற்கு உதவியாக சிறிலங்கா கடற்படைக்கு ஏழு பீரங்கிப்படகுகள் தற்போது கிடைத்துள்ளதாகவும் விமானப்படைக்கு அடுத்த மாதத்தில் மூன்று ரஷ்ய தயாரிப்பு விமானங்கள் கிடைக்கவுள்ளதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு கிழக்கில் சிறிலங்கா படையினர் இராணுவ மேலாதிக்கத்தை பெற்றபின்னரே சமரசப் பேச்சுகளுக்கான வட்டமேசை மாநாட்டுக்கு விடுதலைப் புலிகளை அழைப்பது என அதிகாரபூர்வ வட்டாரங்கள் தெரிவித்தன.

இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு வசதியாகவே கிழக்கில் நடைபெறவிருந்த உள்ளூராட்சி தேர்தல்களை அரசு அண்மையில் ஒத்திவைத்ததாக லங்கா தீப மேலும் தெரிவித்துள்ளது.

## கைது

சிறிலங்கா பாராளுமன்றக் கட்டடத் தொகுதியை அடுத்துள்ள பகுதியில் துப்பாக்கிகளுடன் காணப்பட்ட இரு பெயர்பெற்ற கேடிகளைப் பொலிசார் கைது செய்துள்ளனர்.

## தொடர்ந்துதரிப்பு

[யாழ்ப்பாணம்]

காங்கேசன்துறை துறைமுகத்தில் தரித்து நிற்கும் குமாரி கப்பல் நேற்றும் பருத்தித்துறை துறைமுகத்திற்கு வரவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

இக் கப்பலிலிருந்து பொருள்கள் இறக்கப்படாத நிலையில் தொடர்ந்து இருநாட்களாக இது காங்கேசன்துறை துறைமுகத்தில் நங்கூரமிட்டுள்ளது.

[தி]

## தெரிவுக்குழு பகிஷ்கரிப்பு கைவிடக் கோரிக்கை

இனப்பிரச்சினை தீர்வுக்கான பாராளுமன்றத் தெரிவுக் குழுவில் இருந்து வாபஸ் பெற்ற சகல கட்சிகளும் நாட்டின் நலனை கருதித் கொண்டு மீண்டும் தெரிவுக் குழுவுக்கு வரவேண்டும். தெரிவுக்குழு தவறினால் சமாதானம் நிலைபெறுவதும் தவறிவிடும் என்று முஸ்லிம் சமய கலாசார ராஜாங்க அமைச்சர் அல்ஹாஜ் ஏ. எச். எம். அஸ்வர் கூறியுள்ளார்.

கொழும்பு மாளிகாவத்தை வை.எம்.எம்.ஏ யின் 43ஆவது வருடாந்த மாநாட்டில் உரையாற்றும் போதே அவர் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

நாட்டில் சமாதானத்தை நிலைநாட்ட சகல கட்சிகளும் பங்களிப்பை நல்க வேண்டும். அரசியல் வேறுபாடுகளை மறந்து சமாதானம் ஒன்றே எம் சகலரினதும் இலட்சியமாக இருக்க வேண்டும். இலங்கை எமது தாயகம். இனப்பிரச்சினைக்கு நாம் முடிவு காண்டாக வேண்டும் என்றார்.

## அம்பாறையில் அகதிகள்

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தில் தற்போது 14613 அகதிகள் முகாம்களிலும் 6611 அகதிகள் முகாமிற்கு வெளியேயும் [4ஆம் பக்கம் பார்க்க]

## புதிதாக சேர்க்கப்பட்டவர்களுக்கு இராணுவப் பயிற்சிகள் அடுத்தவாரம் ஆரம்பம்

## மீனவர் மீது சூடு

நேற்று முன்தினம் இரவு மண்டைதீவு சிறிலங்கா இராணுவ காவலரண்களில் இருந்து கடலேரியில் மீன்பிடித்தொழிலில் ஈடுபட்டிருந்தவர்களை நோக்கிப் பரவலாக துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது

## இராணுவம் - பொலிஸ் கதிர்காமத்தில் மோதல்

### அறுவர் படுகாயம்

[கொழும்பு]

கதிர்காமத்தில் சிறிலங்கா இராணுவத்தினருக்கும் பொலிசாருக்குமிடையே இடம்பெற்ற ... பட்டதாம்.

இச் சம்பவம்பற்றி உயர் இராணுவ, பொலிஸ் அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டதை யும்சமாதானப்படுத்தினராம். இதன் போது காயமடைந்த ஆறு இராணுவ, மற்றும் பொலிசார் கதிர்காமம் ஆஸ்

புலிகளுடன் எந்தவிதமான சமரச முயற்சிகளையும் மேற்கொள்வதில்லை என அரச வட்டாரங்களிலும், இராணுவ வட்டாரங்களிலும் முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இந் நிலைப்பாடு தொடர்பாக எதிர்க்கட்சி தலைவர்களுக்கு விளக்கமளிப்பதற்காகவும், மதத் தலைவர்களுக்கு நிலைமையை எடுத்துக்கூறவும் படை அதிகாரிகள் நால்வர் கொண்ட இராணுவக் குழு ஒன்றும் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளதாக அப்பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

அடுத்த ஆறுமாத காலத்தில் விடுதலைப் புலிகளுக்கு எதிராக இராணுவ நடவடிக்கையை மேற்கொள்வதற்கு உதவியாக சிறிலங்கா கடற்படைக்கு ஏழு பீரங்கிப்படகுகள் தற்போது கிடைத்துள்ளதாகவும் விமானப்படைக்கு அடுத்த மாதத்தில் மூன்று ரஷ்ய தயாரிப்பு விமானங்கள் கிடைக்கவுள்ளதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு கிழக்கில் சிறிலங்கா படையினர் இராணுவ மேலாதிக்கத்தை பெற்றபின்னரே சமரசப் பேச்சுகளுக்கான வட்டமேசை மாநாட்டுக்கு விடுதலைப் புலிகளை அழைப்பது என அதிகாரபூர்வ வட்டாரங்கள் தெரிவித்தன.

இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு வசதியாகவே கிழக்கில் நடைபெறவிருந்த உள்ளூராட்சி தேர்தல்களை அரசு அண்மையில் ஒத்திவைத்ததாக லங்காதீப மேலும் தெரிவித்துள்ளது.

## மீனவர் மீது சூடு

நேற்று முன்தினம் இரவு மண்டைதீவு சிறிலங்கா இராணுவ காவலரண்களில் இருந்து கடலேரியில் மீன்பிடித்தொழிலில் ஈடுபட்டிருந்தவர்களை நோக்கிப் பரவலாக துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது.

மீனவர்கள் தொழிலைக் கைவிட்டு கரைவந்து சேர்ந்தனர். அதேவேளை சிலதினங்களாக ஊர்காவற்றுறையின் கரையோரப் பகுதிகளில் அடிக்கடி ரோந்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றன. [21]

வில்லை என்று தெரிவிக்கப் பட்டது.

இக் கப்பலிலிருந்து பொருள்கள் இறக்கப்படாத நிலையில் தொடர்ந்து இருநாட்களாக இது காங்கேசன்துறை துறைமுகத்தில் நங்கூரமிட்டுள்ளது. [தி]

கொழும்பு மாளிகாவத்தை வை.எம்.எம்.ஏ யின் 43ஆவது வருடாந்த மாநாட்டில் உரையாற்றும் போதே அவர் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

நாட்டில் சமாதானத்தை

## அகதிகள்

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தில் தற்போது 14613 அகதிகள் முகாம்களிலும் 6611 அகதிகள் முகாமிற்கு வெளியேயும்

[4ஆம் பக்கம் பார்க்க]

### புதிதாக சேர்க்கப்பட்டவர்களுக்கு

# இராணுவப் பயிற்சிகள் அடுத்தவாரம் ஆரம்பம்

(கொழும்பு)

அண்மையில் 21 இராணுவ ஆட்சேர்ப்பு நிலையங்களில் இராணுவத்திற்கு சேர்க்கப்பட்ட சிங்கள இளைஞர்களுக்கான இராணுவ பயிற்சி எதிர்வரும் 5ஆம் திகதி ஆரம்பிக்கப்படவிருக்கின்றது. இதற்காக இவர்கள் தற்போது இராணுவப் பயிற்சி நிலையங்களுக்கு அனுப்பப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவர்களுக்கான இராணுவப் பயிற்சி முடிவடைந்ததும் வடக்கு-கிழக்கில் போர்முனையில் பணியாற்ற அனுப்பப்படுவர் என அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# இராணுவம் - பொலிஸ் கதிர்காமத்தில் மோதல்

### அறுவர் படுகாயம்

[கொழும்பு]

கதிர்காமத்தில் சிறிலங்கா இராணுவத்தினருக்கும் பொலிசாருக்குமிடையே இடம்பெற்ற மோதல் சம்பவம் ஒன்றில் ஆறுபேர் படுகாயமடைந்தனர்.

கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற மேற்படி சம்பவம் பற்றித் தெரியவருவதாவது: கதிர்காமத்திற்கு சிறிலங்கா இராணுவத்தினர் சிலர் யாத்திரை சென்றுள்ளனர். இவர்கள் அங்கிருந்த கடை ஒன்றில் உணவு உண்ட வேளையில் கடைக்காரருடன் மோதல் ஏற்பட்டுள்ளது. இம்மோதல் முற்றிய வேளை அதனைத் தடுக்க வந்த பொலிசாருக்கும் இவ் இராணுவத்தினருக்கும் இடையே மோதல் ஏற்பட்டதாம்.

இச் சம்பவம்பற்றி உயர் இராணுவ, பொலிஸ் அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து அங்கு விரைந்த உயர் அதிகாரிகள் இருதரப்பினரையும் சமாதானப்படுத்தினராம்.

இதன் போது காயமடைந்த ஆறு இராணுவ, மற்றும் பொலிசார் கதிர்காமம் ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## வவுனியாவில் 2 லொறிகள் படையினரால் தடுப்பு

[வவுனியா]

வடபகுதி வந்த இரு லொறிகள் வவுனியாவில் படையினரால் நேற்று தடுத்து வைக்கப்பட்டுள்ளன. ஈரற்பெரியகுளம் இராணுவ சோதனை நிலையத்திலுள்ள விமானப் படையினர் வடபகுதி வந்த லொறி ஒன்றை தடுத்து வைத்துள்ளனர்.

இதேவேளை வடபகுதி வந்த மற்றுமொரு லொறி நொச்சிமோட்டை பாலத்தடியில் வைத்து படையினரால் தடுக்கப்பட்டு வவுனியாவிற்கு திருப்பிக் கொண்டு செல்லப்பட்டது. மேற்படி லொறிகள் தடுத்து வைக்கப்பட்டதற்கான காரணம் தெரியவரவில்லை.

### மன்னாரில் இருந்து திருமலை வரை

# வடபகுதிக் கடற்பிராந்தியம் தடைப் பிராந்தியமாக பிரகடனம்

(கொழும்பு)

வடக்கு கடற்கரையோரப் பகுதி முழுவதையும் தடை செய்யப்பட்ட பிராந்தியமாக சிறிலங்கா அரசு பிரகடனம் செய்துள்ளது ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா இதற்கான உத்தரவை பிறப்பித்துள்ளார்.

சிறிலங்கா கடற்படை அதிகாரிகளின் அனுமதியின்றி எந்த கப்பலும், படகும் இப்பிராந்தியத்தில் செல்வது தடை செய்யப்பட்டுள்ளது. மன்னார்முதல் திருக்கோணமலை வரையான கடற்பிராந்தியமே தடை செய்யப்பட்ட வலயமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடற்புலிகளின் நடவடிக்கைகள் இப் பகுதியில் அதிகரித்துள்ளமையினால் இத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டதாக கொழும்பில் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதுதொடர்பாக சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் வெளியிட்ட அறிவிப்பில் மன்னார் நகர் வடக்கிலிருந்து திருக்கோணமலை வரையிலான கடலில் வள்ளங்கள் அல்லது கப்பல்கள் செல்வதற்கு நேற்று முன்தினம் நள்ளிரவுமுதல் தடைவிதிக்கப்பட்டுள்ளது. பொதுப் பாதுகாப்பு பிரமாணத்திற்கேற்ப இது பிரகடனம் செய்யப்பட்டுள்ளது. கடற்படைத் தளபதியினால் அனுமதிக்கப்படும் வள்ளங்கள் மட்டுமே இக் கடற்பகுதியில் செல்ல அனுமதிக்கப்படும்.

வடபகுதிக்கு செல்லும் கப்பல்களுக்கு பாதுகாப்பு வழங்கவும், வடபகுதிக் கடலில் கடற்படையின் ரோந்தை சீர்குலைக்க விடுதலைப்புலிகளின் தற்கொலைப் படை கடற்படைப் படகுகளை வெடிமருந்துகளுடன் சென்று தாக்குவதை தடுக்கவும் இந்த கடுமையான கடற்தடைச் சட்டம் கொண்டுவரப்படுகிறது. இதை மீறி நடப்பவர்கள் குற்றவாளிகளாக காணப்படுவர் என குறிப்பிடப்பட்டுள்ளது.

## இந்திய மீனவர் சடலம் படையினரால் ஒப்படைப்பு

(கொழும்பு)

நேற்று முன்தினம் வடபகுதி கடலில் இந்திய மீன்பிடி இழுவைப் படகு மீது சிறிலங்கா கடற்படை படகு நடாத்தின தாக்குதலில் கொல்லப்பட்ட இந்திய மீனவரின் சடலம் இந்திய அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதில் காயமடைந்த மேலும் நான்கு இந்திய மீனவர்கள் இராணுவ ஆஸ்பத்திரியில் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகின்றனர்.

விடுதலைப் புலிகளின் படகு என்று கருதியே மீன்பிடிப் படகை கடற்படையினர் தாக்கியதாக கொழும்பில் இராணுவ அதிகாரி ஒருவர் கூறினார். இம் மீன்பிடி படகுடன் முன்னதாக கடற்படையினர் வானொலி சமிக்கை மூலம் தொடர்பு கொண்டதாகவும் பதில் ஏதும் கிடைக்காததாலேயே அதை தாக்க நேர்ந்ததாகவும் அவர் கூறினார்.

# கிழக்கு செல்ல முடியாதவர் தேர்தல் பற்றி பேசுகிறார்

### - காமினி தெரிவிப்பு

[கொழும்பு]

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி அரசுடன் இணைய வேண்டுமானால் கட்சியை கலைக்க வேண்டும் என அரசு நிபந்தனைகள் எதையும் முன்வைக்கவில்லை. அந்த நிபந்தனையை முன்வைத்தால் கூட அதற்கு நாம் இணங்க மாட்டோம் என ஜ. ஐ. தே. மு. தலைவர் காமினி திஸ்ஸநாயக்கா தெரிவித்துள்ளார்.

வெள்ளவத்தையில் கட்சிக் கிளை அலுவலகம் ஒன்றை திறந்து வைத்தபோது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். மட்டக்களப்பில் நடைபெற்ற நடமாடும் செயலகத்தில் கலந்துகொள்ள முடியாத ஜனாதிபதி வடக்கு - கிழக்கு இணைப்புக்கு சர்வசன வாக்கெடுப்பு குறித்து பேசுகிறார். வடக்கு கிழக்கில் யுத்தம் மூன்று மாதங்களில் முடியும் என படைத்தளபதிகள் பலமுறை கூறினர். ஆனால் யுத்தம் முடிவடையவில்லை. எமது படையினரே பலியாகின்றனர். 'பயங்கரவாத' நடவடிக்கையில் ஈடுபடுவோரை யுத்தத்தினால் மட்டும் வெற்றிகொள்ள முடியாது என காமினி மேலும் தெரிவித்தார்.

இனப்பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்கு பாராளுமன்ற தெரிவுக்குழு, வட்டமேசை மாநாடு, சர்வகட்சி மாநாடு போன்ற பல நடத்தப்பட்டன. ஆனால் முடிவுதான் எதுவுமில்லை. பொதுமக்களின் பணத்தில் இந்தப் பேச்சுவார்த்தைகள் நடைபெறுகின்றன. ஆனால் ஐ. தே. க. மட்டும்தான் இப்பிரச்சினைக்கான ஒரு தீர்வை இதுவரை சமர்ப்பிக்காத கட்

(4ஆம் பக்கம் பார்க்க)

## பாடசாலை கட்டடங்கள் படையினர் கோருகின்றனர்

(கொழும்பு)

இராணுவத்தில் புதிதாக சேர்பவர்களுக்கு பயிற்சிகளை வழங்க சில பாடசாலை கட்டடங்களை தந்துதவுமாறு பாதுகாப்பு அதிகாரிகள் கல்வி அமைச்சைக் கோரியுள்ளனர்.

இதுதொடர்பாக அண்மையில் கல்வியமைச்சில் அதிகாரிகளுடன் இராணுவ அதிகாரி ஒருவர் பேச்சு நடத்தியதாக தெரிவிக்கப்படுகிறது.

எனினும் இக் கோரிக்கைகளை மேல் மாகாண கல்வி அதிகாரிகள் ஏற்க மறுத்துள்ளதாகவும் இதனால் இவ்விடயம் மத்திய கல்வி அமைச்சர் மட்டத்தின் கவனத்திற்குகொண்டு வரப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## படையினர் சூட்டிற்கு பயணி ஒருவர் காயம்

(வவுனியா)

கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை தாண்டிக்குளம் தடைமுகாம் பகுதியிலிருந்து வடக்கு நோக்கி யாழ். வீதியூடாக முன்னேறிய சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கி பிரயோகத்தினால் பொதுமகன் ஒருவர் காயமடைந்தார்.

நொச்சிமோட்டை பாடசாலைப் பகுதிவரை முன்னேறிய இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தின் போதே தாண்டிக்குளம் ஊடாக வவுனியா வருவதற்காக அப்பகுதியில் காத்து நின்ற பொதுமக்களில் ஒருவர் காயமடைந்ததாக தெரியவருகிறது.

## வரி விளம்பரம்

### பதவி வெற்றிடம்

யாழ்நகரின் மத்தியில் இயங்கும் ஒரு முன்னணி உணவகத்திற்கு மேலைத்தேய கீழைத்தேய, சைனீஸ் உணவுவகைகள் சிற்றுண்டிகள் தயாரிப்பதில் அனுபவம் உள்ளவர்களும், மற்றும் உணவு பரிமாறுவதில் அனுபவம் உள்ளவர்களும் தேவை. நற்சான்றுப் பத்திரங்கள் அனுபவ சான்றிதழ்களுடன் நேரில் வரவும் தொடர்பு சுவையருவி. யாழ்ப்பாணம் (சி-7292)

### றெனி மூக்குக்கண்ணாடியகம்

உங்கள் கண்களை பரிசோதித்துச் சரியாக கண்ணாடி வழங்கப்படும் இல. 288, நாவலர் வீதி (யாழ். தனியார் வைத்தியசாலைக்கு முன்பாக) ஆனைப்பந்தி யாழ்ப்பாணம் (5786)

### மதுப்பிரியர்களே!

உங்களுக்கு ஓர் புதிய உலகம்! புதுமை - இனிமை - அனைத்தும் நிறைந்த ''மதுச்சாலை'' 312 ருத்திரத்துறை வீதி. [முச்சந்திரைச் சந்தை] யாழ்ப்பாணம். [5820]

### அதிர்ஷ்டசாலிக்கு அழகிய கைக்கடிகாரம்

எமது ஸ்தாபனத்தில் மணிக்கூடு, றேடியோக்கள் சேவிஸ் செய்யும் வாடிக்கையாளர்களின் பற்றுச்சீட்டு இலக்கங்கள் ஒவ்வொரு மாத முடிவிலும் அதிர்ஷ்ட இலாபச்சீட்டிழுப்பு மூலம் அதிர்ஷ்டம் பார்க்கப்பட்டு அதிர்ஷ்டசாலிக்கு அழகிய Casio கைக்கடிகாரம் பரிசாக வழங்கப்படும். ''டில்கா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ் 284, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (சி-7339)

### தேவை

சிறிய குடும்பத்திற்கு சமையல் வேலை தெரிந்த வீட்டுப் பணியாள் தேவை. ஆண் / பெண் இருபாலாரும் அண்மையில் இடைக்கப்பெற்ற நற்சான்றுப் பத்திரங்களுடன் நேரடியாக சமூகம் தரவும் இல. 10, பழைய பூங்கா வீதி சுண்டுக்குளி (ஓல்ட்பாக் ஓட்டலுக்கு அருகில். சம்பளம் நேரடியாக பேசித்தீர்க்கலாம். (சி-7342)

### விபரம் கூறிப் பெறவும்

திருநெல்வேலி விவசாய பாடசாலைக்கு சமீபமாக

### பாலராசிரியராக

பாலர் ஆசிரியர் பயிற்சி நெறி ஆரம்பமாகிறது க.பொ.த (சா/த) குறைந்தபட்ச தகைமையாகும். நேரில் சற்று வசதியற்றோர் தபால் மூலமும் பயிலலாம். பாலர் ஆசிரியர் சங்கம் உயர் கலைக் கல்லூரி 73 மருத்திரத்துறைவீதி, ஆனைப்பந்தி யாழ்ப்பாணம். [4097]

### வைத்திய சேவை

ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட மருந்து வகைகளையும் குழந்தைகளுக்கான இரத்தஎண்ணெய் கூந்தல் வளர் தைலங்களையும் பெற்றுக் கொள்ளலாம். வைத்தியர் ஐகந்தையா முருகானந்தா வைத்திய நிலையம் பள்ளிவாசல் அருகாமை மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். [5824]

### காவேரி சீயாக்காப்பவுடர்

பேன், சொடுகு, அழுக்கு, அறவே இல்லாமல் செய்யும் ஷாம்போவைவிட பன்மடங்கு பலனைத்தருவது கிடைக்குமிடம் பகவான் மருந்தகம் 221, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (5830)

### பங்கீட்டு அட்டை வழங்கப்படுகிறது

வேலணை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மக்களிற்கான பங்கீட்டு அட்டைகள் அந்தந்த பகுதி கிராம சேவகர்களால் தற்பொழுது வழங்கப்பட்டு வருகிறது [88]

ஜோ. எகட்டனின்

ஜெசித்தாராவின்

**உணவுப் பார்சல்கள்**

காலை 11-30 மணி முதல் பகல் 3-00 மணி வரை கிடைக்கும்.

மீன் / இறைச்சி ரூபா 30/-

மரக்கறி ரூபா 25/-

மாணவர்களுக்கு விசேட சலுகை

## கல்வி வளர்ச்சிக் கழகம் மாங்குளத்தில் திறப்பு

(மாங்குளம்)

மாங்குள தச்சடம்பன் கிராம மக்கள் விடுதலைப்புலிகள் அரசியல்துறை, மாணவரமைப்பு ஆகியோரின் ஒத்துழைப்புடன் நேற்று முன்தினம் மாலை 4 மணிக்கு மாங்குளத்தில் அறிவொளி கல்வி வளர்ச்சிக்கழகம் என்ற பெயருடன் கல்வி வளர்ச்சிக்கழகம் திறந்து வைக்கப்பட்டது இவ்வைபவத்தில் தமிழீழ தேசியக் கொடியை தமிழீழ அரசியல் துறை துணைப்பொறுப்பாளர் கரிகாலன் ஏற்றி வைத்தார். மங்கள விளக்கினை முல்லை மாவட்ட கல்விப்பணிப்பாளர் தணிகாசலம், பொருண்மிய மேம்பாட்டு நிறுவன வன்னி மாவட்ட இணைப்பாளர் இரதநாதன் ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

பெயர்ப் பலகையை வன்னி மாவட்ட மகளிர் அமைப்பு துணைப்பொறுப்பாளர் செல்வி அன்பரசி திரைநீக்கம் செய்தார். இவ்வைபவத்தில் பல பொதுமக்களும் கலந்து கொண்டனர்.

### University of Jaffna
### *TENDER NOTICE*

Tenders are invited from contraetors registered for Civil Engineering works with University of Jaffna or ICTAD for:

a) Addition/Improvements to cycle sheds at administration block and Faculty of Arts

b) Addition/Improvements to parking facilities at Faculty of Science

Tender forms can be obtained from Works Engineer University of Jaffna from 07 09 93 10- 9 93 on producing receipt from Bursar University of Jaffna for the payment of the following tender fees for each tender.

a) refundable -Rs. 2000/-

b) non - refundable -Rs 200/-

Tenders should be sent to reach Registrar, University of Jaffna not later than 21-09 93 at- 10 00 a. m

Tender forms can be inspected free of charge at Planning Branch, University of Jaffna during

### தங்க வளையல் கண்டெடுப்பு

சுன்னாகம் பகுதியில் குழந்தைக்கான தங்க வளையல் ஒன்று கண்டெடுக்கப்பட்டு எமது அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் நேரில் வந்து ஆதாரம் காட்டிப்பெற்றுக்கொள்ளலாம்

## பிறந்தநாள் வாழ்த்து 04-09-93



செல்வன்

**செபமாலைநேசன் யுபின்சன் ஏஸ்லி**

நெல்லியடி முடக்காட்டைச் சேர்ந்த திரு. செபமாலைநேசன் றோசன் தம்பதிகளது செல்வப்புதல்வன் யுபின்சன் ஏஸ்லி. இன்று (04-09-93) தனது முதலாவது பிறந்த நாளைக் முடக்காடு இல்லத்தில் கோலாகலமாகக் கொண்டாடுகின்றார்.

இவரை அப்பா, அம்மா, அம்மம்மா, அம்மப்பா, அப்பம்மா, தொட்டப்பா, தொட்டம்மா, பெரியத்தை சின்னத்தை, மூத்தமாமா, ஆசைமாமா, சின்னமாமா, குட்டிமாமா, அன்றி மற்றும் இனஜனபந்துக்கள் புனித அந்தோனியாரின் திருவருள் பெற்று நீடூழி வாழ்க என வாழ்த்துகின்றனர்.

தகவல்

(5791) திரு. தே. அன்ரனி (மாமா)

நெல்லண்டையான் வெளியீட்டு கழக

6 வது நூல் [ஆலய வழிபாடும் தத்துவமும்]

**வெளியீட்டு விழாவும்;**

சிவஸ்ரீ தியாக

சோமாஸ்கந்தராஜாக் குருக்கள் B.A.

அவர்களின்

## முக்கிய அறிவித்தல்

### ஒடியோ, வீடியோ தொடர்பான அறிவித்தல்

அனைத்து ஒலிப்பதிவு, ஒளிப்பதிவு (ஒடியோ, வீடியோ) நாடாக்களை பதிவு செய்பவர்கள், வாடகைக்கு கொடுப்பவர்கள், பதிவு நாடாக்களை விற்பனை செய்பவர்கள் அனைவரிற்கும் அறியத்தருவது, இதுவரை தமிழீழக் கலைஞர்களால் உருவாக்கப்பட்ட ஒலி, ஒளி நாடாக்களை (ஒடியோ, வீடியோ) நீங்கள் இலகுவில் பெறக்கூடிய வகையில் யாழ். பழைய பஸ் நிலையத்திற்கு அருகாமையில் உள்ள தமிழீழ வானொலித் தொடர்பகத்துடன் தொடர்பு கொண்டு தவறாது அனைவரும் எமது ஒலி, ஒளி நாடாக்களைப் பெற்றுக் கொள்ளலாம் என, ''நிதர்சனம்'' அறியத் தருகின்றது.

குறிப்பு:-

தமிழீழத்தில் நடைபெறும் அனைத்து முக்கிய சம்பவங்களையும், பிறநாட்டுச் சம்பவங்களையும் தொகுத்து மாதம்தோறும் எம்மால் வெளியிடப்படும், ''ஒளிவீச்சு'' வீடியோ சஞ்சிகையில் இம்மாதம் விடுதலைப் புலிகளால் ''இதயபூமி 1'' எனப் பெயரிடப்பட்டு நடாத்தப்பட்ட ''மண்கிண்டி மலை இராணுவமுகாம் தகர்ப்பு'', ''புத்தளத்தில் நடாத்தப்பட்ட இரு தாக்குதல்கள்'' என்பவற்றை களத்தில் நின்று நேரடியாகப் பிடிக்கப்பட்ட படங்களையும் தாங்கி வருகிறது, என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அனைவரினதும் ஒத்துழைப்பையும் எதிர்பார்க்கிறோம்.

''நிதர்சனம்'' நிறுவனம்

தொடர்பு:

தமிழீழ வானொலி தொடர்பகம்.

யாழ். பழைய பஸ்நிலையம், யாழ்ப்பாணம்.

(சி-7334)

## நினைவு கூருகின்றோம் ...

### 1993-09-04

1985ஆம் ஆண்டு இதே தினத்தில் வவுனியா -தவசிமலைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட 17 தமிழர்கள்.

1986ஆம் ஆண்டு மன்னார் கோட்டை சிறிலங்கா இராணுவ முகாம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின்போது வீரச்சாவெய்திய -

2 ம் லெப். காளி [சந்தியாப்பிள்ளை ஜெராட் ஜோன்சன் - கங்காணித்தீவு - மன்னார்]

1987ஆம் ஆண்டு வவுனியா - பன்றிக்கெய்தகுளம் பகுதியில் தேசவிரோத சக்திகள் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய -

2 ம் லெப். கையிலை [கோபாலசிங்கம் வன்னியசிங்கம்- கொந்தக்காரன்குளம்-வவுனியா]

வவுனியா குருமண்காட்டுச் சந்தியில் தேசவிரோத சக்திகள் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய-

284, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (சி-7339)

## தேவை

சிறிய குடும்பத்திற்கு சமையல் வேலை தெரிந்த வீட்டுப் பணியாள் தேவை. ஆண் / பெண் இருபாலாரும் அண்மையில் இடைக்கப்பெற்ற நற்சான்றுப் பத்திரங்களுடன் நேரடியாக சமூகம் தரவும் இல. 10, பழைய பூங்காவீதி, சுண்டுக்குளி (ஒல்ட்பாக் ஒடடலுக்கு அருகில். சம்பளம் நேரடியாக பேசித்தீர்க்கலாம். (சி-7342)

## விபரம் கூறிப் பெறவும்

திருநெல்வேலி விவசாய பாடசாலைக்கு சமீபமாக பலாலி வீதியில் ஒரு தொகைப் பணம் கிடந்து கண்டெடுக்கப்பட்டு எமது அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. தவறவிட்டவர்கள் நேரில் வந்து விபரம் கூறிப் பெற்றுக் கொள்ளலாம். கொக்குவில் இராஜா அரிசி ஆலையைச் சேர்ந்த த பாலசுப்பிரமணியம் இப்பணத்தை எமது அலுவலகத்தில் ஒப்படைத்துள்ளார்.

## ஜெசித்தாராவின்

# உணவுப் பார்சல்கள்

காலை 11-30 மணி முதல்
பகல் 3-00 மணி வரை
கிடைக்கும்.

மீன் / இறைச்சி
ரூபா 30/-
மரக்கறி ரூபா 25/-

மாணவர்களுக்கு
விசேட சலுகை

எல்லாவிதமான
உணவு ஓடர்களும்
கவனிக்கப்படும்.

## ஜெசித்தாரா

சுண்டுக்குளி மகளிர் கல்லூரி
முன் ஒழுங்கை
சுண்டுக்குளி

[சி-7345]

to parking facilities at Faculty of Science

Tender forms can be obtained from Works Engineer University of Jaffna from 07 09 93 10- 9 98 on producing receipt from Bursar University of Jaffna for the payment of the following tender fees for each tender.

a refundable -Rs. 2000/-
b) non - refundable -Rs 200/-

Tenders should be sent to reach Registrar, University of Jaffna not later than 21-09 93 at 10 00 a. m

Tender forms can be inspected free of charge at Planning Branch, University of Jaffna during office hours.

Tender board, University of Jaffna reserves the right to reject any tender.

REGISTRAR
University of Jaffna
P O Box 57,
Thirunelvely,
Jaffna. (சி-7348)

இணையற்ற சேவையில்...

# 1994-ம் ஆண்டில்

மேலும் புதிய பிரிவுகள் / கிளைகள்
ஆரம்பமாகின்றன.

20
1973—1993

பின்வரும் பாட ஆசிரியர்களுக்கான ஆண்டு (6-11)

## விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

விஞ்ஞானம் — தமிழ் — ஆங்கிலம்

**நிபந்தனைகள்:**

[1] போதிய கல்வித்தகைமைகளும் 2 வருடங்களுக்கு குறையாத கற்பித்தல் அனுபவமும்.

[2] 7 மைல் சுற்றாடலினுள் வசிப்பவர்களாக இருக்க வேண்டும்.

[3] சனி, ஞாயிறு நாட்களில் கட்டாயம் கடமையாற்றக் கூடியவர்களாக இருக்க வேண்டும்.

[4] சுயமுகவரி இட்ட முத்திரையுடன் கூடிய தபால் மேலுறையுடன் இம் மாதம் 20-ம் தேதிக்கு முன் விண்ணப்பிக்கவும்.

- அதிபர்

ESTD.- 1973 REGD.- № J/7993

# The Express Institute

IRUPALAI - KOPAY

(சி/7340)

வன் யூபிஸ்சன் ஏஸ்லி, இன்று (04-09-93) தனது முதலாவது பிறந்த நாளைக் முடக்காடு இல்லத்தில் கோலாகலமாகக் கொண்டாடுகின்றார்.

இவரை அப்பா, அம்மா, அம்மம்மா, அம்மப்பா, அப்பம்மா, தொட்டப்பா, தொட்டம்மா, பெரியத்தை சின்னத்தை, மூத்தமாமா, ஆசைமாமா, சின்னமாமா, குட்டிமாமா, அன்ரி மற்றும் இனஜனபந்துக்கள் புனித அந்தோனியாரின் திருவருள் பெற்று நீடூழி வாழ்க என வாழ்த்துகின்றனர்.

தகவல்
(5791) திரு. தே. அன்ரனி (மாமா)

நெல்லண்டையான் வெளியீட்டு கழக

6 வது நூல் [ஆலய வழிபாடும் தத்துவமும்]

## வெளியீட்டு விழாவும்;

சிவஸ்ரீ தியாக
சோமாஸ்கந்தராஜாக் குருக்கள் B.A.
அவர்களின்

## ஆச்சார்ய குருபட்டாபிஷேக

# பத்தாம் ஆண்டு விழாவும்

இடம்: சிவன் கோவிலடி பர்வதவர்த்தனி
கலா மண்டபம் பருத்தித்துறை.

காலம்: ஸ்ரீமுக வருடம் ஆவணித்திங்கள் 19-ம்நாள்
**(04- 09- 1993)** இன்று
காலை 8 மணியளவில் ஆரம்பமாகும்.

மௌனவஞ்சலி:

தலைவர் உரை
திரு. மூ வேலாயுதபிள்ளை
(இளைப்பாறிய ஆசிரியர் பாலபண்டிதர் டிப்பிளோமா Dip- in- Tamil)

மங்களாசீர்வாதம்
சிவஸ்ரீ தா. வாசுதேவக்குருக்கள்

மங்களவாழ்த்துரைகள்
சிவஸ்ரீ S. கெண்டபாணி தேசிகக் குருக்கள் J P.

## நூலவெளியீடும் வெளியீட்டுரையும்

யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறை தலைவர் பேராசிரியர்
கலாநிதி அ. சண்முகதாஸ் Ph D. அவர்கள்

அருள் ஆசியுரை
பிரம்மஸ்ரீ இ சதாசிவசர்மா
சிவஸ்ரீ. கந்த சிவபாதசுந்தரக் குருக்கள்
சிவஸ்ரீ. ம ச வேதாரண்யக் குருக்கள்
சுவாமி இராசேந்திரக் குருக்கள் அவர்கள்

விமர்சனவுரை
திரு. செ. ஏகாம்பரநாதன் B A. (கல்வி அதிகாரி)

பாராட்டுரைகள்
திரு. நா குழந்தைவேலு B A (Tamil Spl)
(யாழ். புதிய உயர்கல்லூரி தமிழ் விரிவுரையாளர் D O.A.S

மதிப்புரை
யாழ்ப்பாண பல்கலைக்கழக தமிழ்த்துறை சிரேஷ்ட விரிவுரையாளர்
திரு. சி. எஸ் சிவலிங்கராஜா M. A.

சிறப்புரைகள்
பண்டிதர் வித்துவான் இலக்கணவித்தகர்
க. கிருஷ்ணபிள்ளை அவர்கள்

நூலாசிரியர் பதிலுரை
சிவஸ்ரீ தியாகசோமாஸ்கந்தராஜாக்குருக்கள் B A.
(இலங்கை)
(நெல்லண்டை அம்மன் கோவில் பிரதமகுரு, வடமராட்சி இந்துக் குருமார் ஒன்றிய பொருளாளர், இந்துமாமன்ற ஆலோசகர்)

நன்றியுரை
சிவத்திரு க.சோமசுந்தரம் (அதிபர் தையிட்டிம.வி.)
நெல்லண்டையான் வெளியீட்டுக் கழகத் தலைவர்

அறிஞர்கள் ஆர்வலர்கள் அனைவரையும்
அன்புடன் அழைக்கின்றோம்.

நெல்லண்டையான்
(5826) வெளியீட்டுக் கழகச் செயலாளர்.

# நினைவு கூருகின்றோம் ...

## 1993-09-04

1985ஆம் ஆண்டு இதே தினத்தில் வவுனியா -தவசி மலைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட 17 தமிழர்கள்.

1986ஆம் ஆண்டு மன்னார் கோட்டை சிறிலங்கா இராணுவ முகாம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின்போது வீரச்சாவெய்திய -

**2 ம் லெப். காளி** [சந்தியாப்பிள்ளை ஜெராட் ஜோன்சன் - கங்காணித்தீவு - மன்னார்]

1987ஆம் ஆண்டு வவுனியா - பன்றிக்கெய்தகுளம் பகுதியில் தேசவிரோத சக்திகள் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய -

**2 ம் லெப். கையிலை** [கோபாலசிங்கம் வன்னியசிங்கம்- கொந்தக்காரன்குளம்-வவுனியா]

வவுனியா குருமண்காட்டுச் சந்தியில் தேசவிரோத சக்திகள் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய-

**கப்டன் தனம்** [நாகமணி வசந்தராசன் - தண்ணீரூற்று, முள்ளியவளை - முல்லைத்தீவு]

**2 ம் லெப். கண்ணன்** [சே. சிறீசேதுகாவலர் - குருமண்காடு - வவுனியா]

1988ஆம் ஆண்டு யாழ் - பலாலிப் பகுதியில் தேசவிரோத சக்திகள் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய –

**பேரின்பம்** [குருசுமுத்து மைக்கல்பிள்ளை - காங்கேசன்துறை - பலாலி]

திருமலையில் சிறிலங்கா இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு பின்னர் காணாமல் போன 03 தமிழிளைஞர்கள்.

1989ஆம் ஆண்டு யாழ் - சண்டிக்குளிப் பகுதியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய -

**முரளி** [இராசநாயகம் பிறேமதாஸ் - இணுவில் தெற்கு - யாழ்]

மணலாறு - நெடுங்கேணிப் பகுதியில் தேசவிரோத சக்திகளினால் சுட்டுக் கொல்லப்பட்ட அதே இடத்தைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன்.

1990ஆம் ஆண்டு வவுனியா - பாவற்குளம், முதலாம்படிவம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய -

**சுஜிப்/சிறி** (கணபதிப்பிள்ளை சிறிரஞ்சித் - பம்பைமடு - வவுனியா)

மட்டு - வாகரைப் பகுதியில் சுகவீனம் காரணமாக எமைப் பிரிந்த -

**முகிலன்** ( —— சொறில் - 12 - அம்பாறை)

கிளிநொச்சி - பரந்தன் பகுதியில் தனது கடையைத் திறக்க முனைந்தபோது சிறிலங்கா இராணுவத்தினர் வைத்து விட்டுச் சென்ற கண்ணிவெடி வெடித்ததில் கொல்லப்பட்ட தமிழிளைஞன்.

1991ஆம் ஆண்டு வவுனியா கூழாங்குளம் பகுதியிலுள்ள தனது வீட்டினைத் துப்பரவு செய்யச் சென்றபோது சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 2 தமிழர்கள்.

1992ஆம் ஆண்டு தமிழீழக் கடற்பரப்பில் (யாழ் குடா) தொழிலில் ஈடுபட்டிருந்த கடற்றொழிலாளர் மீது சிறிலங்காக் கடற்படை பீரங்கித் தாக்குதல் மேற்கொண்டபோது நாவாந்துறையைச் சேர்ந்த சிறுவன் தலை சிதறிப் பலி.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

## தமிழீழ விடுதலைப் புலிகள்.

[சி/7347]

சிந்தனைக்கு

உயிருள்ள உண்மையை நோக்கி தடுமாறி வரும் தவறு, செத்த உண்மையை விடவும் நன்மை பயக்கும்.

- ரொமேய்ன் ரோலண்ட்

ஈழநாதம்

81, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 04-09-1998

தொலைபேசி

ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2025

த. பெ. எண்-05

## அகதிகளின் அவலமும் மண்ணின் மகிமையும்

இலங்கையில் இருந்து வெளியேறி, தமிழகத்தை அகதிகளாகச் சென்றடைந்தோர் இன்று திரிசங்கு நிலையில் பெரும் துயருக்கும் துன்பத்திற்கும் உள்ளாகியுள்ளனர். அவர்கள் அங்கும் வாழமுடியாமலும், இங்கு வந்தும் வாழ்வதற்கான வசதியின்றியும் பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்கியுள்ளனர்.

1991ஆம் ஆண்டில் இருந்து தமிழக அரசாங்கம், இலங்கைத் தமிழ் அகதிகளை வெளியேற்றிவிட வேண்டும் என்பதில் முனைப்பாகவே உள்ளது. இதில் சர்வதேச வரன் முறைகள், மனிதாபிமானம், சகோதர உணர்வு என்பவற்றிற்கும் அப்பால் இலங்கைத் தமிழரைத் துரத்தி விட்டால் போதும் என்பதில் குறியாகவே உள்ளது.

இதை நிறைவேற்றும் முயற்சியில் தீவிரமாக இறங்கிய தமிழக அரசாங்கம், முதலில் வலுக்கட்டாயமாக அகதிகளை வெளியேற்ற முற்பட்டது வற்புறுத்தலின் அடிப்படையில் வெளியேற்றலுக்கான சம்மதம் பெறுவதில் அதிகாரிகள் முனைந்தனர்.

ஆனால், இவ் விவகாரம் மனித நேய ஸ்தாபனங்களினது பெரும் கண்டனத்துக்கும், செய்தி ஸ்தாபனங்களில் முக்கியத்துவமும் பெறப்பட்ட பின்னர், அகதிகளுக்கான ஐ. நா. உயர் ஸ்தானிகராலயத்தின் உதவியுடன் இப்பணிகள் மேற்கொள்ளப்படத் தொடங்கின. ஆயினும், தமிழ் அகதிகளின் வெளியேற்றமானது ஒருவகை வற்புறுத்தலின் அடிப்படையிலேயே தற்பொழுதும் இடம் பெறுகின்றது என்பதே நிதர்சனமாகும்.

அகதிகளை வெளியேற்றுவதே நோக்கமாகக் கொண்ட தமிழக அரசு அழுத்தங்களை மறைமுகமாகப் போட்டது. முதலில் தமிழக அரசு நிவாரண உதவிகளை வழங்கியதோடு, வேலை செய்வதற்குமான அனுமதியையும் மறுத்தது. பின்னர், கல்வி கற்பதற்கான சலுகைகளையும் மறுத்தது. உயர் வகுப்பு மாணவர்களுக்கு கல்லூரிகளில் அனுமதி வழங்க மறுத்ததோடு, பாடசாலை

## மரண விசாரணை அதிகாரி விண்ணப்பம் கோரல்

[வவுனியா]

வவுனியா மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் திடீர் மரணவிசாரணை அதிகாரிகளுக்கான வெற்றிடங்கள் நிரப்பப்படவுள்ளன.

மேற்படி வெற்றிடங்களை நிரப்புவதற்காக தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. மேற்படி பதவிக்கு விண்ணப்பிப்பதற்குரிய விபரங்கள் கடந்த மாதம் 20 ஆம் திகதி வர்த்தமானியில் வெளியாகியுள்ளது.

ஆசிக்குளம், மகாஇரம்பைக்குளம், கந்தபுரம், பண்டாரிக்குளம், புதுக்குளம், சேமமடு, ஓமந்தை, பூவரசன்குளம், பம்பைமடு, நெடுக்குளம், சின்னசெட்டிக்குளம், ஈரப்பெரியகுளம், மாமடுவ, வெங்கலச்செட்டிக்குளம், பாவற்குளம், நேரியகுளம், செட்டிகுளம், கந்தசாமிநகர், மடுதோட்டம், நெடுங்கேணி, உடையார்வூர், வடக்கு, மேல்பற்று தெற்கு ஆகிய பகுதிகளுக்கே மரண விசாரணை அதிகாரிகள் நியமிக்கப்படவுள்ளனர்.

## பிரேமா சொத்துக்கள் குறைத்து காட்டப்பட்டது

(கொழும்பு)

காலஞ்சென்ற ஜனாதிபதி ஆர் பிரேமதாசாவின் அசையும் அசைவற்ற ஆதனங்களின் பெறுமதி குறைத்து மதிக்கப்பட்டிருப்பதாகக் குற்றச்சாட்டுத் தெரிவிக்கப்படுகிறது. இந்தக் குற்றச்சாட்டு கவனத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்படும் என்று பிரதம வரிமதிப்பீட்டாளர் நளின் மென்டிஸ் தெரிவித்துள்ளார்.

சொத்துக்களை மாற்றும் போது செல்வவரி தற்போது வசூலிக்கப்படுவதில்லை என்று தெரிவித்த அவர் ஏனைய வரிகள் தொடர்பாக அபிப்பிராயம் கூற மறுத்து விட்டார். வரியைக் குறைப்பதற்காகவே ஆதனங்களின் பெறுமதி குறைத்து மதிப்பிடப்பட்டுள்ளதாம்.

பிரேமதாசாவின் மனைவி ஹேமா கொழும்பு மாவட்ட நீதிமன்றில் பிரேமதாசாவின் ஆதனங்கள் சம்பந்தமாக முதிச வழக்கொன்றைத் தாக்கல் செய்துள்ளார்.

## சிறிலங்கா மக்கள் பலரும் யுத்தத்தில் சலித்துள்ளனர்

- குமார் ரூபசிங்க

(கொழும்பு)

பொதுவாகச் சிறிலங்கா மக்கள் இந்த யுத்தத்தினால் களைத்துப்போய் உள்ளார்கள். தாமுண்டு, தமது வேலையுண்டு என்று தமது பிள்ளைகளின் கல்வி மற்றும் விடயங்களில் கவனம் செலுத்துகிறார்கள். ஆனால் இராணுவ கீர்த்தி பெறுவதில் மூடத்தனமான ஆர்வமுடைய ஒரு சிலர் வெகுஜனத் தொடர்புச்சாதனங்களைப் பயமுறுத்தியுத்தச் செய்திகளை வெளியிடுகிறார்கள் இவர்கள் ஒழுங்கு செய்யும் கூட்டங்களுக்கு ஆயிரம் பேர் கூட சேர்வதில்லை. இவர்கள் பத்திரிகை மீதும், கொள்கை வகுப்பவர்கள் மீதும் மிதமிஞ்சிய செல்வாக்கைப் பாவிக்கிறார்கள். - இவ்வாறு முன்னாள் ஐக்கிய முன்னணிப் பிரமுகரும், ஜனவேகய குழுத் தலைவருமான குமார் ரூபசிங்க சண்டே ரைம்ஸ் பத்திரிகைக்கு வழங்கிய பேட்டி ஒன்றில் கூறியுள்ளார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் -

பாடப் புத்தகங்கள் மாணவர்களின் தகவல் ஊடகமாக உள்ளன. சமூகமயமாக்கல் முக்கியமாகப் பாடநூல்கள் மூலமாகவும் இடம்பெறுகின்றன. பாடநூல்கள் சம்பந்தமாகப் பல நாடுகளில் பிரச்சினைகள் தலை தூக்கியுள்ளன. அமெரிக்காவில கறுப்பின மக்கள் விஞ்ஞானம், கல்வி, சங்கீதம் ஆகிய துறைகளில் தாங்கள் வழங்கிய பங்களிப்பு இடம் பெற வேண்டும் என்று கோரி வருகிறார்கள். அமெரிக்க வரலாற்றை அங்லோ-சக்ஸன் இன அடிப்படையில் அணுகுவதை அவர்கள் ஏற்கிறார்கள் இல்லை. அதனால் அமெரிக்காவில் பாடநூல்கள் மீளவும் எழுதப்படுகின்றன. எமது நாட்டிலும் எமது பாடப் புத்தகங்களில் உள்ள ஐதீகங்கள் களையப்பட வேண்டும். சமூகங்களுக்கிடையில் நல்லெண்ணத்தைக் கட்டி வளர்க்க பாடப் புத்தகங்கள் மீளவும் எழுதப்பட வேண்டும் என்றார்.

## பொன்விழா ஆண்டுக்கான கண்காட்சி இன்று ஆரம்பம்

## சந்தைப் பொருளாதாரத்தை ஏற்க சுதந்திரக் கட்சி தீர்மானம்

(கொழும்பு)

சந்தைப் பொருளாதார முறையை ஏற்றுக் கொள்ள சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் முன்வந்துள்ளது. இவ்வாறு சுதந்திரக் கட்சியின் மத்திய கமிட்டி உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்,

சுதந்திரக் கட்சியின் மத்திய கமிட்டி அண்மையில் கூடிய போது மேற்கொள்ளப்பட்ட இக் கொள்கை மாற்ற முடிவு முக்கியமானதாகக் கருதப்படுகிறது.

நாட்டில் பெரும் பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்துவதற்காகவும், இம் முடிவு எடுக்கப்பட்டிருக்கும் அதே சமயம், இலாப கரமாகவும், நல்ல முறையிலும் இயங்கும் அரசாங்க தொழில் முயற்சிகள் தனியார் மயப்படுத்தப்பட மாட்டாது எனவும் எந்தத் துறையிலும் ஏகபோகத் தன்மை உருவாகுவதைத் தடுக்கக் கூடியதாக அரசாங்க தொழில் முயற்சிகளுடன் தனியார் துறைப்போட்டிக்கு ஊக்குவிப்பு வழங்கப்படும் எனவும் இத் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சுகாதாரம், கல்வி, தொழில் பயிற்சி, போக்குவரத்து போன்ற சமூக நலன்புரி விடயங்களைப் போன்று இவ் விடயமும் கையாளப்படுமெனவும் இந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை சுதந்திரக் கட்சியின் 42-வது வருடாந்தக் கொண்டாட்டம் இவ் வாரத்தில் கொழும்பில் கொண்டாடப்படும்போது கட்சியை சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை அங்கத்தவர்கள், உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள், அமைப்பாளர்கள் அனைவரும் கலந்து கொள்ள வேண்டுமென்று சீரமைப்புக் கமிட்டியின் தலைவர் அனுருத்த ரத்வத்த கூறியுள்ளார்.

### அரசு முடிவுக்கு கவலை

(கொழும்பு)

வடக்கு கிழக்கு நிலைமைகள் மற்றும் அமைச்சரவை முடிவுகள் என்பவற்றை அறிவிக்கும் வாராந்த பத்திரிகையாளர் மாநாட்டை இனி நடத்துவதில்லை என அரசு முடிவு செய்துள்ளது. அரசின் இம்முடிவு குறித்து கொழும்பிலுள்ள வெளிநாட்டு பத்திரிகையாளர்கள் சங்கம் கவலை தெரிவித்துள்ளது.

### கணனி இன்மை காரணம்

(யாழ்ப்பாணம்)

யாழ் செயலக ஓய்வூதியப் பிரிவிற்கு கணனி (கொம்பியூட்டர்) இல்லாமையினாலேயே ஓய்வூதியக் கொடுப்பனவு யாழ் குடாநாட்டில் தாமதமாக நடைபெறுவதாக செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

யாழ். செயலக ஓய்வூதியப்

## நேர்முகப் பரீட்சைக்கு அழைத்ததில் பாரபட்சம்

பொலீஸ் அதிகாரிகள் புகார்

(கொழும்பு)

பதினைந்து பேருக்குப் பொலிஸ் சுப்பிரின்டென்ட் பதவி உயர்வு வழங்குவதற்கு 150 உதவிப் பொலிஸ் சுப்பிரின்டென்ட்களை, பதவி உயர்வுச்சபை, நேர்முகத் தேர்வுக்கு அழைத்திருப்பது குறித்துப் பொலிஸ் வட்டாரங்களில் முரண்பாடான கருத்துகள் நிலவுவதாகக் கூறப்படுகின்றது.

சேவை மூப்பு அடிப்படையில் 15 பேரை அழைப்பதற்குப்பதிலாக மேலதிகமாக 85 பேரை நேர்முகத் தேர்வுக்கு அழைத்திருப்பது குறித்து மூத்த பொலிஸ் அதிகாரி ஒருவர் அதிருப்தி தெரிவித்தார். இது ஒழுங்கு முறைக்கு மாறான காரியமாகும் என்று மூத்த பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்துள்ள அதேவேளை, மேலதிகமாக நேர்முகத் தேர்வுக்கு அழைப்பது வழமையான நடவடிக்கை என்று பொலிஸ் தலைமைத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதேபோல் 65 பேருக்கு உதவிப் பொலிஸ் சுப்பிரின்டென்ட் பதவி உயர்வு வழங்குவதற்காக 300 பிரதம இன்ஸ்பெக்டர்கள் அழைக்கப்பட்டிருப்பது குறித்தும் அதிருப்தி தெரிவிக்கப்படுகிறது.

## ஆடைத்தொழிற்சாலைகளை மூடும் நிலை வரலாம்

- உரிமையாளர்கள் தகவல்

(கொழும்பு)

இருநூறு ஆடைத்தொழிற்சாலைகளையும் மூடும்நிலை உருவாகியுள்ளதாக ஆடைத் தொழிற்சாலை உரிமையாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். ஆடைத் தொழிற்சாலைகளுக்கு வழங்கப்பட்ட மூலப் பொருள் கோட்டா சென்ற வாரம் குறைக்கப்பட்டதாலேயே இந்நிலை உருவாகியுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

கோட்டாவை அரசு வெட்டியதால் தனது 10 ஆடைத் தொழிற்சாலைகளை மூட வேண்டி ஏற்படும் என்றும், இத்தொழில் முறிவினால் சுமார் 10,000 தொழிலாளர் வேலை இழக்க வேண்டிய நிலை உருவாகும் என்றும் அவர் எச்சரித்தார். தனக்கு வழங்கப்பட்ட 40,000 டசின்களுக்கான கோட்டா 1750 டசின்களாகக் குறைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

சம்பந்தப்பட்ட ஆடைத் தொழிற்சாலை உரிமையாளருக்கு 23 ஆடைத்தொழிற்சாலைகள் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது நிலைமையில் மாற்றம் ஏற்படாது போனால் புடைவைத்தொழில் அமைச்சின் முடிவை ஆட்சேபித்துத்தான் நீதிமன்றத்தில் தடை உத்தரவு கோரப் போவதாகவும் அவர் தெரிவித்தார்.

## தமிழகத்தில் தேர்தலை நடத்தி ஆட்சியைப் பிடிக்கமுடியுமா?

- ஜெயலலிதாவுக்கு வாழப்பாடி சவால்

(சென்னை)

தமிழகத்தில் ராஜிவ் காந்தி சிந்திய இரத்தத்தால ஆட்சி பீடம் ஏறவில்லை என்று முதலமைச்சர் ஜெயலலிதா தெரிவிக்கிறார். அப்படியானால் பதவியை ராஜினாமா செய்துவிட்டு தேர்தலை சந்திக்க

கட்சிக்காரர்களாலும், ஜெயலலிதா அவமானப்படுத்தப்பட்டார். அப்போது காங்கிரசுடன் உறவு இல்லாத போதும் கூட ராஜிவ் தமிழ்நாடு முழுவதிலும் கண்டனக் கூட்டம் நடத்தும்படி சொன்னார்.

அதன் பிறகு நடைபெற்ற

றலுக்கான சம்மதம் பெறுவதில் அதிகாரிகள் முனைந்தனர்.

ஆனால், இவ் விவகாரம் மனித நேய ஸ்தாபனங்களினது பெரும் கண்டனத்துக்கும், செய்தி ஸ்தாபனங்களில் முக்கியத்துவமும்பெறப்பட்ட பின்னர், அகதிகளுக்கான ஐ.நா. உயர் ஸ்தானிகராலயத்தின் உதவியுடன் இப்பணிகள் மேற்கொள்ளப்படத் தொடங்கின. ஆயினும், தமிழ் அகதிகளின் வெளியேற்றமானது ஒருவகை வற்புறுத்தலின் அடிப்படையிலேயே தற்பொழுதும் இடம் பெறுகின்றது என்பதே நிதர்சனமாகும்.

அகதிகளை வெளியேற்றுவதே நோக்கமாகக் கொண்ட தமிழக அரசு அழுத்தங்களை மறைமுகமாகப் போட்டது. முதலில் தமிழக அரசு நிவாரண உதவிகளை வழங்கியதோடு, வேலை செய்வதற்குமான அனுமதியையும் மறுத்தது. பின்னர், கல்வி கற்பதற்கான சலுகைகளையும் மறுத்தது. உயர் வகுப்பு மாணவர்களுக்கு கல்லூரிகளில் அனுமதி வழங்க மறுத்ததோடு, பாடசாலைகளில் இலவச விநியோகங்கள் யாவற்றையும் நிறுத்தியது.

தற்பொழுது நிலைமை மேலும் மோசமடைந்துள்ளது. இன்று தமிழகத்தில் நிலவும் தண்ணீர் பற்றாக் குறையும் அகதிகளை வெகுவாகப் பாதித்துள்ளது. ஒரு குடும்பத்துக்கு ஒருகுடம் தண்ணீர் மட்டுமே சமைப்பதற்கெனவும், குடிப்பதற்கெனவும் அரசால் வழங்கப்பட்டு வருகின்றது. அத்தோடு, குடியிருப்பை வேய்ந்து கொடுக்காமல் விட்டதோடு, சமயலுக்கான பாத்திரங்களை வழங்குவதையும் நிறுத்திக் கொண்டுள்ளது.

இந் நிர்ப்பந்தங்கள் தொடர்ந்ததினால் பலர் தமிழகத்தை விட்டு. தம் விருப்பத்தையும் மீறியும் வெளியேற தீர்மானித்துள்ளனர்.

இதனை, அகதிகளுக்கான ஐ.நா.சபையும்மேற்பார்வை செய்து வருகின்றது. இதேவேளை, வெளியேறும் அகதிகளுக்கு இலங்கையில் தமது சொந்த இடங்களில் அவர்கள் குடியமர்வதற்கான ஏற்பாடுகளும், பொருளாதார உதவிகளும் வழங்கப்படும் எனவும் உறுதிகள் அளிக்கப்படுகின்றன.

ஆனால், அகதிகள் போனால் காணும் என்ற ரீதியில் தமிழகம் அனுப்பி வைக்க இங்கு வந்தவர்களை வழமை போலவே இனவாத நோக்கில் சிங்கள அரசாங்கம் ஓரங்கட்டி விட்டுள்ளது கடந்தமாத ஆரம்பத்தில் தமிழ் நாட்டிலிருந்து இலங்கை திரும்பிய அகதிகளை வேப்பங்குளம், ஆசிக் குளம் பகுதிகளில் தங்கவைக்க ஏற்பாடு செய்யப்பட்ட போதும், 24 நாட்களின் பின்பும் சிங்கள அரசு உணவுப் பொருட்கள் எதையும் அவர்களுக்கு வழங்கவில்லை. இதன் காரணமாக அவர்கள் பட்டினியால் வாடவேண்டிய அவல நிலை ஏற்பட்டது.

இந் நிலையில் இந்தியா சென்று அகதிகளாக தமிழகத்தில் தங்கியிருந்த இலங்கைத் தமிழர் படும் துன்பம் அளப்பரியதாகும். தமிழக அரசு துரத்தி விட்டால் போதும் என்ற நிலையில் செயற்பட, சிங்கள அரசு தமக்கும் இதற்கும் பொறுப்பில்லை என்ற நிலையில் செயற்பட்டு வருகின்றது. இவ்வாறாக அகதிகள் இத் துன்பத்தை அனுபவிப்பது குறித்துகவலைகொள்ளவேண்டி இருப்பினும், ஈழப்போர்தொடங்கியஉடன் அவசரப்பட்டு தமதுமண்ணைவிட்டு ஓடியவர்களுக்கு தாயகமண்ணின் மதிப்பை விளக்க இது ஒரு நல்ல படிப்பினைமாகும்.

கீர்த்தி பெறுவதில் மூடத்தனமான ஆர்வமுடைய ஒரு சிலர் வெகுஜனத் தொடர்புசாதனங்களைப் பயமுறுத்தியுத்தச் செய்திகளை வெளியிடுகிறார்கள் இவர்கள் ஒழுங்கு செய்யும் கூட்டங்களுக்கு ஆயிரம் பேர் கூட சேர்வதில்லை. இவர்கள் பத்திரிகை மீதும், கொள்கை வகுப்பவர்கள்மீதும் மிதமிஞ்சிய செல்வாக்கைப் பாவிக்கிறார்கள். - இவ்வாறு முன்னாள் ஐக்கிய முன்னணிப் பிரமுகரும், ஜனவேகய குழுத் தலைவருமான குமார் ரூபசிங்க சண்டே ரைம்ஸ் பத்திரிகைக்கு வழங்கிய பேட்டி ஒன்றில் கூறியுள்ளார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் -

விஞ்ஞானம், கல்வி, சங்கீதம் ஆகிய துறைகளில் தாங்கள் வழங்கிய பங்களிப்பு இடம் பெற வேண்டும் என்று கோரி வருகிறார்கள். அமெரிக்க வரலாற்றை அங்லோ-சக்ஸன் இன அடிப்படையில் அணுகுவதை அவர்கள் ஏற்கிறார்களில்லை. அதனால் அமெரிக்காவில் பாடநூல்கள் மீளவும் எழுதப்படுகின்றன. எமது நாட்டிலும் எமது பாடப் புத்தகங்களில் உள்ள ஐதீகங்கள் களையப்பட வேண்டும். சமூகங்களுக்கிடையில் நல்லெண்ணத்தைக் கட்டி வளர்க்க பாடப் புத்தகங்கள் மீளவும் எழுதப்பட வேண்டும் என்றார்.

## பொன்விழா ஆண்டுக்கான கண்காட்சி இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி பொன் விழா ஆண்டின் கல்விக் கண்காட்சி இன்று சனிக்கிழமை அதிபர் திருமதி தி. நாகராசா தலைமையில் நடைபெறும்.

கல்லூரி மண்டபத்தில் நடைபெறும் இக் கண்காட்சியை பிரதம விருந்தினராக கலந்து கொள்ளும் பேராசிரியர் எஸ். வி. பரமேஸ்வரன் திறந்து வைப்பார்

இன்று தொடங்கி எட்டாம் திகதி வரை காலை 9.00மணி முதல் பிற்பகல் 3.00 மணி வரை இடம்பெறும்.

யாழ் மாநகரசபை ஆணையாளர் வெ.பொ. பாலசிங்கம் இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றுவார்.

## பிரதேச செயலகங்களுக்கு 10 லட்சம் ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

அடுத்த ஆண்டு அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக வடக்கு கிழக்கு மாகாணங்களில் உள்ள ஒவ்வொரு பிரதேச செயலகங்களுக்கும் பத்து இலட்சம் ரூபா பணம் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரமான அடிப்படையிலான நிதி ஒதுக்கீட்டின்கீழ் வடக்கு-கிழக்கு மாகாணசபையால் இப்பணம் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்காக 1994 ஆம் ஆண்டிற்கான அபிவிருத்தி திட்டத்தினை நவம்பர் 30 ஆம் திகதிக்கு முன்னர் தங்களுக்கு சமர்ப்பிக்குமாறு மாகாண சபை பிரதம செயலாளர் கோரியுள்ளார்.

## விஜேவீர தாயாருக்கு ஜே.வி.பி. அனுதாபச்செய்தி

[கொழும்பு]

"உமது மகன் இறந்து போனாலும் அவரின் எழுச்சிப் பாதையில் நாமும் சென்று நாட்டில் கம்யூனிச சோசலிச சமூகம் ஒன்றை நிறுவுவதற்கு தொடர்ந்து போராடுவோம்"

மறைந்த ஜே.வி.பி தலைவர் ரோஹன விஜேவீராவின் தாயாரின் இறுதிக் கிரியைகள் கடந்த வெள்ளிக்கிழமை மாத்தறை பொது மயானத்தில் நடந்தபொழுது ஜே.வி.பி இயக்கத்தால் அனுப்பிவைக்கப்பட்ட அனுதாபச் செய்தி அங்கு வாசிக்கப்பட்டது.

இலங்கை முற்போக்கு முன்னணி செயலாளர் ஆரிய புலேகொடவினால் வாசிக்கப்பட்ட அந்த அனுதாபச்செய்தியில் மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது

அன்புத்தாயே நீ இலங்கையில் கம்யூனிஸ்- சோசலிச இயக்கத்தை கட்டியெழுப்புவதற்கு அரும்பாடுபட்ட வீரபுருஷர் ஒருவரைத் தந்துவிட்டு இன்று மறைந்துவிட்டாய் என்று அதில் மேலும் குறிப்பிடப்பட்டிருந்தது.

1990ஆம் ஆண்டில்

## இருபரீட்சை நடைபெற்றதால் மருத்துவபீட அனுமதி அதிகரித்தது

பல்கலைக் கழகங்கள் நிதி ஒதுக்கீட்டைச் சரியாகப் பயன்படுத்தி மேலதிக மாணவர்களை அனுமதிக்கத் தவறிவிட்டன என்று பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழு குற்றம் சாட்டியுள்ளது.

துணைவேந்தர்கள் நிதியைப் பயன் பொருத்தமாகப் உபயோகிக்கத் தவறி விட்டனர் என்றும்; பல்கலைக் கழகங்களில் ஏற்கனவே உள்ள வளங்கள் முழுமையாகப் பயன்படுத்தப்படவில்லை என்றும் பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக் குழு அதிகாரிகள் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

1990இல்இரண்டு க.பொ.த (உயர்தரம்,பரீட்சைகள் வைக்கப்பட்டதால் மருத்துவபீட அனுமதியின் எண்ணிக்கையைக் கடந்த வருடம் அதிகரிக்கவேண்டிய நிலை உருவாகியதாகப் பல்கலைக்கழக மானியங்கள் குழுத் தலைவர் பேராசிரியர் அலுவிகார தெரிவித்தார். டாக்டர்களின் பற்றாக்குறையைச் சமாளிப்பதற்கு வருடமொன்றுக்கு 1,100 டாக்டர்களை உருவாக்க வேண்டும் என்றும் அவர்குறிப்பிட்டார்.

கள் மற்றும் அமைச்சரவை முடிவுகள் என்பவற்றை அறிவிக்கும் வாராந்த பத்திரிகையாளர் மாநாட்டை இனி நடத்துவதில்லை என அரசு முடிவு செய்துள்ளது. அரசின் இம்முடிவு குறித்து கொழும்பிலுள்ள வெளிநாட்டு பத்திரிகையாளர்கள் சங்கம் கவலை தெரிவித்துள்ளது.

### கணனி இன்மை காரணம்

(யாழ்ப்பாணம்)

யாழ் செயலக ஓய்வூதியப் பிரிவிற்கு கணனி (கொம்பியூட்டர்) இல்லாமையினாலேயே ஓய்வூதியக் கொடுப்பனவு யாழ் குடாநாட்டில் தாமதமாக நடைபெறுவதாக செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

யாழ். செயலக ஓய்வூதியப் பிரிவிற்கென கணனி ஒன்று அனுப்பி வைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ள போதிலும் கூட்டுப்படை தலைமையகம் இதற்கு தடைவிதித்துள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (தி)

### ஐ.நா.ஈடுபடவில்லை

[கொழும்பு]

அகதிகளுக்கான ஐ.நா.உயர் ஸ்தானிகராலயத்தின் பணிகள் இலங்கையில் ஒரு மனிதாபிமான அடிப்படையில் வரையறுக்கப்பட்டவை மட்டுமே. அரசியல்பேச்சுவார்த்தைகளிலோ அமைதிகாக்கும் நடவடிக்கைகள்போன்றவற்றிலோ இது ஈடுபடவில்லை என இந்த அமைப்பின் இலங்கை அலுவலகம்விடுத்துள்ளபத்திரிகைஅறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சடலம் மீட்பு

(தென்மராட்சி)

செம்மணி வயல் வெளியில் நேற்றுமுன்தினம் மாலைஇனந்தெரியாத ஒருவரின் சடலம் காணப்பட்டது. சடலம்அருகில் போத்தல் ஒன்று காணப்பட்டது. சடலத்தில் பல காயங்களும் காணப்பட்டன. (86)

புள்ளதாக அவர் மேலும்தெரிவித்தார்.

கோட்டாவை அரசு வெட்டியதால் தனது 10 ஆடைத் தொழிற்சாலைகளை மூட வேண்டி ஏற்படும் என்றும், இந்தத்தொழில் முறிவினால் சுமார் 10,000 தொழிலாளர் வேலை இழக்க வேண்

... ஒப்பிடத்தக்கது நிலைமையில் மாற்றம் ஏற்படாது போனால் புடைவைத்தொழில் அமைச்சின் முடிவை ஆட்சேபித்துத்தான் நீதிமன்றத்தில் தடை உத்தரவு கோரப் போவதாகவும் அவர் தெரிவித்தார்.

## தமிழகத்தில்தேர்தலைநடத்தி ஆட்சியைப் பிடிக்கமுடியுமா?

### - ஜெயலலிதாவுக்கு வாழப்பாடி சவால்

(சென்னை)

தமிழகத்தில் ராஜீவ் காந்தி சிந்திய இரத்தத்தால ஆட்சி பீடம் ஏறவில்லை என்று முதலமைச்சர் ஜெயலலிதா தெரிவிக்கிறார். அப்படியானால் பதவியை ராஜினாமா செய்துவிட்டு தேர்தலை சந்திக்க அவர் முன்வரவேண்டும் இவ்வாறு தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தி தெரிவித்தார்.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் ஐம்பதாவது பிறந்த நாளை முன்னிட்டு சென்னையில் நடந்த வைபவம் ஒன்றில் பேசிய அவர் மேலும் கூறுகையில்,

தமிழக அரசியலில் ராஜீவ் காந்தி தலையிடாமல் இருந்திருந்தால் அ.இ.அ.தி.மு.க.வுடன் உறவுகொள்ளாமல் இருந்திருந்தால் அ.தி.மு.க.வின் மிகப்பெரிய பொறுப்பில் இருப்பவர்கள் அ.தி.மு.க. எம்.பிக்கள் எல்லாம் இன்று விலாசம் இல்லாமல் போய் இருப்பார்கள்.

சட்டசபையில் பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்ட போது கருணாநிதியாலும், அவரது கட்சிக்காரர்களாலும், ஜெயலலிதா அவமானப்படுத்தப்பட்டார். அப்போது காங்கிரசுடன் உறவு இல்லாத போதும் கூட ராஜீவ் தமிழ்நாடு முழுவதிலும் கண்டனக் கூட்டம் நடத்தும்படி சொன்னார்.

அதன் பிறகு நடைபெற்ற பாராளுமன்ற தேர்தலில் அகில இந்திய அளவில் காங்கிரஸ் ஆட்சி ஏற்படவும் தமிழகத்தில் அ.தி.மு.க. ஆட்சி அமைக்கவும் பாடுபடும்படி ராஜீவ் காந்தி கேட்டுக்கொண்டிருந்தார்.

ராஜீவ் காந்தியின் ரத்தத்தினால் பதவிக்கு வரவில்லை என்பது இன்று அ.தி.மு.க.வினர் பேசுகின்றனர். உங்களுக்கு தைரியம் இருந்தால் ஆட்சியைக் கலைத்து விட்டு தேர்தலில் நில்லுங்கள் ஆட்சிக்கு வந்துபாருங்கள் என்றும் சவால்விட்டார்.

அ.தி.மு.கவினர் இன்று நன்றி மறந்தவர்களாக மாறிவிட்டனர். அவர்களை மாற்றியது அந்தஅம்மையார் எனவே அவரை மாற்றிட வேண்டியது எமது கடமை என்றும் தெரிவித்தார்.

## ஏவுகணை ஏற்றுமதிக்கான ஒப்பந்தத்தில் கைச்சாத்து

(வாஷிங்டன்)

ஏவுகணை ஏற்றுமதிக்கான கட்டுப்பாட்டு ஒப்பந்தம் ஒன்றில் அமெரிக்காவும், ரஷ்யாவும் கையெழுத்திட்டுள்ளன

இதன்படி ஏவுகணை தொழில்நுட்பக் கட்டுப்பாட்டு முறையொன்றைக் கடைப்பிடிக்க ரஷ்யா ஒப்புக்கொண்டுள்ளது அமெரிக்க துணை அதிபர் அல்பேர்ட் ஹோரியும் தற்போது அமெரிக்கா சென்றிருக்கும் ரஷ்யப் பிரதமர் விக்டர் செரனோவ்மா சென்னும் இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளனர்.

## தென் ஆபிரிக்க தேர்தலில் இந்தியா நடுநிலை காட்டாது

தென் ஆபிரிக்காவில் நடைபெறவிருக்கும் பொதுத்தேர்தலில் இந்தியா நடுநிலைமை வகிக்க முடியாது என்று இந்திய வெளியுறவு இணை அமைச்சர் சல்மான் குர்ஷித் கூறியுள்ளார்.

தற்சமயம்ஜோகானஸ்பேர்க் சென்றிருக்கும் அவர் அங்கு தென்ஆபிரிக்க இடைக்கால அரசின் அமைச்சர்களுடனான சந்திப்பில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில்

தென் ஆபிரிக்காவின் எதிர்காலமே அங்குநடைபெறவிருக்கும். தேர்தலைப் பொறுத்துதான் இருக்கிறது என்றும், ஆகையால் இத்தேர்தலில் இந்தியா எந்தக் கட்சிக்கும் ஆதரவு காட்டாமல் நடுநிலைமை வகிக்க முடியாது எனவும் குறிப்பிட்டார்.

தென் ஆபிரிக்கா தேர்தல்களைப் பொறுத்தமட்டில் இந்தியா எந்தக்கட்சிக்கும் ஆதரவு காட்டாமல் நடுநிலைமை வகிக்க வேண்டும் என்று தென் ஆபிரிக்க வெளியுறவு அமைச்சர் பிக் போத்தா வெளியிட்ட கருத்தையும், அவர் நிராகரித்துள்ளார்.

ஈழநாதம்

## போராளிக் கலைஞனின் மிருதங்க அரங்கேற்றம்

தமிழீழ விடுதலைப் புலிகளின் போராளிக் கலைஞன் செல்வன் தினேஷ் (அரியநாயகம் சிறீகாந்தா) அவர்களின் மிருதங்க அரங்கேற்றம் இன்று [சனிக்கிழமை] பிற்பகல் 3.00 மணிக்கு நல்லூர் சட்டநாதர் வீதியிலுள்ள இளங்கலைஞர் மன்ற கலா மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் திரு புதுவை இரத்தினதுரை அவர்களின் தலைமையில் நடைபெறவிருக்கும் இந் நிகழ்வில், யாழ். மாவட்ட சிறப்புத் தளபதி திரு. வ. செல்வராசா, மகளிர் படையணியின் சிறப்புத் தளபதி செல்வி ஜெனா ஆகியோர் மங்கள விளக்கேற்றி வைப்பார்கள்.

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழக துணைப் பொறுப்பாளர் திரு. சேரலாதன் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்துவார்.

யாழ்.பல்கலைக்கழக கலைப் பீடாதிபதி திரு. பொ. பாலசுந்தரம்பிள்ளை அவர்களும், வண.பிதா யோசேப் மைக்கல் அடிகளார் அவர்களும் வாழ்த்துரை வழங்குவார்கள்.

விடுதலைப்புலிகள் அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. தமிழ்ச்செல்வன் அவர்கள் கலைஞர்களைக் கௌரவிப்பார். இயலிசை வாரிதி பிரம்மஸ்ரீ வீரமணிஐயர் அவர்கள் மதிப்புரை ஆற்றுவார்.

இதனைத்தொடர்ந்து இசையரங்கு நடைபெறவுள்ளது. செல்வன் தினேஷ் அவர்களின் மிருதங்க வாத்தியத்துடன் இன்னிசை வேந்தர் பொன். சுந்தரலிங்கம் அவர்களின் இன்னிசைக்கச்சேரி இடம்பெறவுள்ளது

## வழிகாட்டல் மையம்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் தொழில் வழிகாட்டல் நடவடிக்கைகளுக்கு ஒரு காரியாலயம் திறக்கப்பட்டுள்ளது. இதற்கு இணைப்பாளராகப் பொருளியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. நந்தகுமார் நியமிக்கப்பட்டுள்ளார். முன்னர் இவர் கொழும்பில் திட்டமிடல் அதிகாரியாகவும் கடமையாற்றியவர்.

இம் மாதம் முதலாம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இந்த நிறுவனம் பல்கலைக்கழக மாணவர்களுக்குத் தொழில் வழிகாட்டுதலுடன் ஆலோசனை வழங்குதல் மற்றும் கல்வி சம்பந்தமான தகவல் மையமாகவும் செயற்படும். நாளடைவில் இதன் கடமைகள் விஸ்தரிக்கப்படும் எனவும் தெரி...

## இரவு பீரங்கி தாக்குதல் ஒருவர் காயம்

(யாழ்ப்பாணம்)

நேற்றிரவு கல்முனைக் கடற்பரப்பில் மீனவர்கள் மீது சிறிலங்கா கடற்படையினர் பீரங்கித் தாக்குதல் நடாத்தியுள்ளனர்.

இத் தாக்குதலில் சவரியான் செல்வா (வயது 33) என்பவர் காயமடைந்துள்ளார்.

## அரசியலில் பிரவேசிக்க பிரேமா மகன் முயற்சி

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவின் மகன் சஜித் பிரேமதாசா அரசியலில் பிரவேசிக்க முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது. அம்பாந்தோட்டை மாவட்டத்தில் இவர் அரசியலில் பிரவேசிக்க திட்டமிட்டுள்ளார்.

கடந்த வாரம் சஜித் பிரேமதாசா அம்பாந்தோட்டை பகுதிக்கு சென்று அங்குள்ள அரசியல் வாதிகளை சந்தித்ததாக தெரிவிக்கப்படுகிறது. அம்பாந்தோட்டைப் பிரதேசத்தில் அரசியல் நடவடிக்கையில் இறங்க தீர்மானித்துள்ள சஜித் பிரேமதாசா, விரைவில் ஐ. தே. க. செயலருக்கு இது குறித்து அறிவிப்பார் என அவருக்கு நெருங்கிய வட்டாரங்கள் தெரிவித்தன.

## வீதி அபிவிருத்திக்கு 200 தார் பீப்பாக்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் வீதிகளை அபிவிருத்தி செய்வதற்கு சுமார் 200பீப்பா தாரை வீதிகள் அபிவிருத்தி அதிகார சபை யாழ் மாவட்டத்திற்கு ஒதுக்கியுள்ளது.

இத் தகவலை யாழ் அரச அதிபர் கா. மாணிக்கவாசகர் தெரிவித்துள்ளார். தற்சமயம் வெற்றுப் பீப்பாக்கள் தட்டுப்பாடாக உள்ளதாகவும் போதியளவு வெற்றுப் பீப்பாக்கள் கிடைக்கப் பெற்றதும் மேற்குறிப்பிட்ட அளவான தார் யாழ் மாவட்டத்திற்கு எடுத்து வரப்படவுள்ளதாக மேலும் அவர் தெரிவித்தார்.

இவை எடுத்துவரப்பட்டதும் யாழ். மாவட்டத்தில் முக்கியமாக பழுதடைந்த நிலையில் காணப்படும் வீதிகள் செப்பனிடப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது [பா]

## அமெ.அஞ்சல்நிலையத்திற்கு மீனவர் தொடர்ந்து எதிர்ப்பு

(கொழும்பு)

இரணவில பகுதியில் அமைக்கப்படும் அமெரிக்காவின் வொய்ஸ்ஒப் அமெரிக்கா வானொலி அஞ்சல் நிலையத்திற்கு இப்பகுதி மீனவர்களும், கத்தோலிக்க தேவாலயங்களும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன. இந்நிலையம் அமைவதால் இலங்கையின் வடமேற்கு கரையில் அமெரிக்க நீர்மூழ்கி கப்பல்கள் செல்லும் நிலை ஏற்பட்டு தமது மீன்பிடியை பாதிப்பதாக அமையலாம் என இப்பகுதி மீனவர்கள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

இராணுவ தொடர்பு நிலையத்திற்கான ஒரு போர்வையாக அமெரிக்க வானொலி நிலையம் அமையலாம் எனறும் இவர்கள் அச்சம் தெரிவித்துள்ளனர். அண்மையில் இப்பகுதிக்கு சென்ற பத்திரிகையாளரிடம் கருத்து வெளியிட்ட உள்ளூர் பத்திரிகையாளர் ஒருவர் அமெரிக்கா இங்கிருந்து ஒரு யுத்தத்தைக் கூட ஆரம்பிக்கலாம். யாருக்குத் தெரியும். அவர்கள் எப்போதும் யுத்தத்தில் ஈடுபட்டுள்ளவர் என்றார்.

## வெட்டுக் காயத்துடன் வயோதிபர் சடலம்

[யாழ்ப்பாணம்)

கணபதி கதிரவன் [வயது 75) என்ற வயோதிபர் ஒருவரின் சடலம் கழுத்தில் பெரிய வெட்டுக்காயத்துடன் தமிழீழ காவல்துறையினரால் யாழ் போதனா மருத்துவ மனைக்கு நேற்றுக்காலை கொண்டுவரப்பட்டது.

இறந்தவரது மரண விசாரணை யாழ் போதனா மருத்துவ மனையில் நடைபெற்ற போது இறந்தவரின் மகள் சாட்சியமளிக்கையில் தனது தந்தை தனது கழுத்தை தானே வெட்டினார் என தெரிவித்தார். (சி]

## சுதந்திரக்கட்சியை காக்க அனுரா பிரசாரமாம்

(கொழும்பு)

எதேச்சதிகாரமுள்ள தலைமைத்துவத்தின் பிடிகளிலிருந்து சுதந்திரக் கட்சியைக் காப்பாற்றுவதற்கும், கட்சியை ஜனநாயக ரீதியாக்குவதற்கும், கட்சியில் தற்போது எதிர் நோக்கியுள்ள நெருக்கடியை நீக்குவதற்கும் கட்சி உறுப்பி... இப்பேச்சாளர் தெரிவித்தார்.

இவ்வருட இறுதிக்குள் கட்சியின் பொதுமகாநாடொன்று நடைபெறுமென்று கட்சியின் தலைமைப்பீடம் அளித்துள்ள உறுதியையிட்டு நாங்கள் ஏமாற மாட்டோம், பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கை வெறும் கண்துடைப்பாகும்.

## அடையாளம் காணப்பட்டது

நேற்று முன்தினம் துண்டி மயானத்தில் சடலமாக இருந்து தமிழீழ காவல் துறையினரால் மீட்கப்பட்ட சடலம் தெய்வேந்திரம் என்பவருடைய தென நேற்று அடையாளம் காணப்பட்டது.

மேற்படி நபரின் மரணம் தொடர்பாக மரண விசாரணை...

## வீரவணக்கக் கூட்டம்

வலிகாமம் கோட்டம் நல்லூர் வட்டத்தில் 9 ஆம் மாதத்தில் வீரச்சாவடைந்த மாவீரர்களுக்கான வீரவணக்க கூட்டம் இன்று இரவு 8 மணிக்கு கோண்டாவில் கிழக்கு நாகபூசணி அம்மன் கோவிலில் நடைபெறும். இதில் விடுதலைப் புலிகள் உறுப்பினர்கள் கலந்து கொண்டு உரையாற்றுவர்.

## நூல்கள் அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கைப் பல்கலைக் கழக தமிழ்த் துறையின் மறைந்த பேராசிரியர் ஆ சதாசிவம் பயன்படுத்திய பெறுமதி வாய்ந்த மொழியியல் நூல்கள் பல யாழ். பல்கலைக் கழகத்துக்கு அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

தற்போதைய சூழ்நிலையில் யாழ். பல்கலைக் கழகத்தில் நிலவும் நூல் தட்டுப்பாட்டை பல்கலைக்கழக நூலகர் முருகவேள் பேராசிரியர் குடும்பத்தின் கவனத்துக்கு கொண்டு வந்ததை அடுத்தே பேராசிரியரின் பாரியார் இந் நூல்களை அன்பளிப்பு செய்துள்ளார்.

மொழியியல், மருத்துவம் சம்பந்தமான நூல்களும் அகராதிகளும், சஞ்சிகைகளும் அடங்கிய 441 நூல்களை...


யாழ். பல்கலைக்கழக

**வெளிவாரி விரிவுரைகள்**

கலைமாணி பகுதி I B. A PART I

வணிகமாணி பகுதி I B Com. PART I

**விரிவுரைகள் 5-9-93 இல் ஆரம்பமாகின்றன**

குறிப்பு:- பாடத்திட்டம் குறித்தகாலப்பகுதியில் முடிக்கப்படவேண்டியிருப்பதால் பரீட்சை முடிவு வரும்வரை காத்திராமல் விரிவுரைகளுக்கு சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

உதவிப்பதிவாளர்

பட்டப்படிப்புகள் கல்லூரி

148/1 ஸ்ரான்லி வீதி,

(சி-7343) யாழ்ப்பாணம்.



**கண்ணீர் அஞ்சலி**

யாழ் தொழில்நுட்பக் கல்லூரியில் கல்வி பயிலும் எமது உடன் மாணவர்களான ரவீந்திரன் HNDA II (DAY), ரதீஸ்வரன் D A. (DAY), ரஞ்சனாதேவி H. N. D A (EVN.) ஆகியோரின் தந்தையார்

**கதிரவேலு தெய்வேந்திரம்**

அவர்கள் காலமானதையொட்டி எமது கண்ணீர் அஞ்சலியையும், குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்து அன்னாரின் ஆன்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறோம்.

H. N. D. A II (DAY), D. A. (DAY).

ஆசிரியர்களும், மாணவர்களும்

யாழ். தொழில்நுட்பக் கல்லூரி. (5834)



**4-ம் ஆண்டு நினைவஞ்சலி**



ஆண்டவன் படைப்பு:

15-06-1944

அநியாய அழிப்பு:

19 08-1989

திதி:

01-09-1993

**திரு. இராஜசிங்கம் (கிளி)**

என்றும் எங்கள் உள்ளத்தில்
பாச சுடர்விடும் பாச விளக்கே!
உமது ஆத்ம சாந்திக்காக ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

'வளர்மதி வாசா' அன்பு மனைவி,

கல்பொல்லை வீதி, அருமை மகள், சகோதரர்கள்,

## மையம்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தில் தொழில் வழிகாட்டல் நடவடிக்கைகளுக்கு ஒரு காரியாலயம் திறக்கப்பட்டுள்ளது. இதற்கு இணைப்பாளராகப் பொருளியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. நந்தகுமார் நியமிக்கப்பட்டுள்ளார். முன்னர் இவர் கொழும்பில் திட்டமிடல் அதிகாரியாகவும் கடமையாற்றியவர்.

இம் மாதம் முதலாம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இந்த நிறுவனம் பல்கலைக்கழக மாணவர்களுக்குத் தொழில் வழிகாட்டுதலுடன் ஆலோசனை வழங்குதல் மற்றும் கல்வி சம்பந்தமான தகவல் மையமாகவும் செயற்படும். நாளடைவில் இதன் கடமைகள் விஸ்தரிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

---

யாழ்ப்பாணப்

பல்கலைக்கழகப் பொதுப்

பட்டமளிப்பு விழா

1993-09-11

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பொதுப் பட்டமளிப்பு விழா 1993-09-11 ஆம் திகதி மூன்று அமர்வுகளில் நடைபெறும்.

பட்டமளிப்பு விழாவில் நேரடியாகப் பங்குபற்றும் பட்டதாரிகளுக்கு 1993-09-08 தொடக்கம் 1993-9-10ஆம் திகதிவரை காலை 9-30 - 12-00 வரையும், பிற்பகல் 1-30 - 3-30 மணிவரைக்கும் பட்டமளிப்பு விழா அங்கிகள் வழங்கப்படும்.

அங்கிகளைப் பெறவரும் பட்டதாரிகள் புகைப்படத்திற்கான ரூபா 30/- ஐ பல்கலைக்கழக சிறாப்பரிடம் செலுத்தி அதற்குரிய பற்றுச்சீட்டையும், தமது பல்கலைக்கழக அடையாள அட்டையையும் கல்விக்கிளையில் சமர்ப்பித்து அங்கிகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

பதிவாளர்.

திகதி:- 1993-09-02

(சி/7349)

---

கப்பல்கள் செல்லும் நிலை ஏற்பட்டு தமது மீன்பிடியை பாதிப்பதாக அமையலாம் என இப்பகுதி மீனவர்கள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

இராணுவ தொடர்பு நிலையத்திற்கான ஒரு போர்வையாக அமெரிக்க வானொலி

---

(யாழ்ப்பாணம்)

கணபதி கதிரவன் (வயது 75) என்ற வயோதிபர் ஒருவரின் சடலம் கழுத்தில் பெரிய வெட்டுக்காயத்துடன் தமிழீழ காவல்துறையினரால் யாழ் போதனா மருத்துவ மனைக்கு நேற்றுக்காலை கொண்டுவரப்பட்டது.

இறந்தவரது மரண விசாரணை யாழ் போதனா மருத்துவ மனையில் நடைபெற்ற போது இறந்தவரின் மகள் சாட்சியமளிக்கையில் தனது தந்தை தனது கழுத்தை தானே வெட்டினார் எனத் தெரிவித்தார். (சி)

---

## சுதந்திரக்கட்சியை காக்க அனுரா பிரசாரமாம்

(கொழும்பு)

எதேச்சதிகாரமுள்ள தலைமைத்துவத்தின் பிடிகளிலிருந்து சுதந்திரக் கட்சியைக் காப்பாற்றுவதற்கும், கட்சியை ஜனநாயக ரீதியாக்குவதற்கும், கட்சியில் தற்போது எதிர்நோக்கியுள்ள நெருக்கடியை நீக்குவதற்கும் கட்சி உறுப்பினர்களுக்கு எடுத்துக் கூறுவதற்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அனுரா குழுவினர் விரைவில் நாடெங்கும் பிரசாரமொன்றை மேற்கொள்வார்களென இக்குழுவின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

அண்மையில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி எம். பி. ஒருவரின் இல்லத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் அனுராகுழுவினர் செயல்திட்டமொன்றைத் தயாரித்தனர் என்றும் இப்பேச்சாளர் தெரிவித்தார்.

இவ்வருட இறுதிக்குள் கட்சியின் பொதுமகாநாடொன்று நடைபெறுமென்று கட்சியின் தலைமைப்பீடம் அளித்துள்ள உறுதியையிட்டு நாங்கள் ஏமாற மாட்டோம். பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கை வெறும் கண்துடைப்பாகும். திலக் கருணாரத்னவைக் கட்சியிலிருந்து நீக்கியது செல்லுபடியாகாதென்று சுப்ரீம் கோர்ட் தீர்ப்பளித்துள்ளதன் விளைவாக கட்சியின் தலைமைப் பீடத்திற்குப் பெரும் அவமானம் ஏற்பட்டுள்ளதைப் போக்குவதற்காக வருடாந்த மாநாட்டை நடத்தப் போவதாகவும் கட்சியின் நிர்வாகிகள் தேர்தலை நடத்தப் போவதாகவும் கூறப்படுவது வெறும் கண்துடைப்பு எனவும் அவர் கூறினார்.

## பட்டதாரி சம்பளம் இல்லை 2000 ஆசிரியர்கள் பாதிப்பு

ஆசிரிய சேவையிலிருந்து பட்டம் பெற்றோருக்கு பட்டதாரிகளுக்கான சம்பளம் வழங்கப்படும என அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் இதுவரை அது அமுலாக்கப்படவில்லை. சேவையிலிருந்து பட்டம் பெற்ற ஆசிரியர்களுக்கு 01. 06. 93 இலிருந்து பட்டதாரிச் சம்பளம் வழங்கப்படும் என ஜனாதிபதியினால் முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் இதற்கான சுற்றறிக்கை இன்னமும் அனுப்பி வைக்கப்படவில்லை.

இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் இதனால் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. சேவையிலிருக்கும் போது பட்டம் பெற்றோர்க்கு பட்டதாரி சம்பளம் வழங்குவதற்கான திட்டத்தை அமைச்சரவையும் அங்கீகரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

---

## அடையாளம் காணப்பட்டது

நேற்று முன்தினம் துண்டி மயானத்தில் சடலமாக இருந்து தமிழீழ காவல் துறையினரால் மீட்கப்பட்ட சடலம் தெய்வேந்திரம் என்பவருடையதென நேற்று அடையாளம் காணப்பட்டது.

மேற்படி நபரின் மரணம் தொடர்பாகமரண விசாரணை அதிகாரி விசாரணை நடாத்திய பின் சடலம் உறவினரிடம் ஒப்படைக்கப் பட்டது. இறந்தவர் கிருமிநாசினி அருந்தி தற்கொலை செய்து கொண்டதாக தெரியவருகின்றது. (சி)

## கலை விழா

குருநகர் இசைநடன இல்லத்தின் இரண்டாவது ஆண்டு கலைவிழா இன்று சனிக்கிழமை காலை 6.90மணியளவில் யாழ். சென்ஜேம்ஸ் மகாவித்தியாலயத்தில் நடைபெற உள்ளது.

தலைவராக யாழ் சென்ஜேம்ஸ் மகா வித்தியாலய அதிபர் திரு.அ. ஸ்ரனிஸ்லோஸ் அவர்களும் பிரதம விருந்தினராக குருநகர் புனித யாகப்பர் ஆலயபங்குத் தந்தை அருட்திருஆர்.எம்.ஜி. நேசநாயகம் அடிகளார் அவர்களும் கலந்து கொள்ள உள்ளார்கள். (17)

## கிளிநொச்சிப் பகுதியில் குளங்கள் புனரமைப்பு

கிளிநொச்சிப் பகுதியிலே தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் உட்கட்டுமானப் பகுதியினரால் புதுக்குளம் என்றழைக்கப்படும் கனகபுரம் குளம், இராமநாதபுரம் குளம், ஆகியவற்றின் புனரமைப்பு வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதில் கனகபுரம் குளம் புனரமைப்பு வேலைகள் பூர்த்தியடைந்துள்ளதுடன் இராமநாதபுர குள வேலைகள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. நீண்ட கால இடைவெளிக்குப் பின்னர் கனகபுரம் குளம் மறுசீரமைக்கப்பட்டுள்ளமை இக்கிராம வாசிகளுக்கு பெரும் நன்மை பயப்பதாகவே அமைந்துள்ளது.

இங்குள்ள கனகாம்பிகைக் குளம் போன்ற ஏனைய சிறு குளங்களையும் மறுசீரமைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

---

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள் 03-09-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 10778

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

27-6024, 24-5877, 41-5979, 22-4766, 27-1939, 41-9530, 22-5622, 26-9611, 41-7563.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

24-4957, 28-6996, 26-8497, 26-0423, 41-7041.

---

அம்பாறையில்

வாழ்ந்து வருவதாக கணிப்பீடுகள் தெரிவிக்கின்றன. இம் மாவட்டத்தில் 21 அகதி முகாம்களில் 14042 தமிழ் அகதிகள் வசிக்கின்றனர்.

---

## அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கைப் பல்கலைக் கழக தமிழ்த் துறையின் மறைந்த பேராசிரியர் ஆ. சதாசிவம் பயன்படுத்திய பெறுமதி வாய்ந்த மொழியியல் நூல்கள் பல யாழ். பல்கலைக் கழகத்துக்கு அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

தற்போதைய சூழ்நிலையில் யாழ். பல்கலைக் கழகத்தில் நிலவும் நூல் தட்டுப்பாட்டை பல்கலைக் கழக நூலகர் முருகவேள் பேராசிரியர் குடும்பத்தின் கவனத்துக்கு கொண்டு வந்ததை அடுத்தே பேராசிரியரின் பாரியார் இந் நூல்களை அன்பளிப்பு செய்துள்ளார்.

மொழியியல், மருத்துவம் சம்பந்தமான நூல்களும் அகராதிகளும், சஞ்சிகைகளும் அடங்கிய 441 நூல்களைக் கொண்ட மேற்படி தொகுதி கடந்த ஞாயிற்றுக்கிழமை பல்கலைக் கழகத்தின் நூலக சேவைகள் உதவிப் பணிப்பாளர் இரா. இராஜேஸ்வரனிடம் கையளிக்கப்பட்டது.

---

அரச

அரசாங்க ஊழியர்கள் எவ்வித பாதுகாப்புமின்றி உயிர்களும், உடைமைகளும் இழக்கும் நிலையில் அஞ்சி வாழவேண்டியுள்ளது. எனவே, இராணுவத்தினரின் கண்மூடித்தனமான தாக்குதல் தொடராது உடன் தடுத்து நிறுத்துமாறு வேண்டுகிறோம்.

இந்நிலை தொடருமானால் அரச ஊழியர்கள் தொழிற் சங்க நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டிவரும் என்பதையும் தங்கள் கவனத்திற்கு சமர்ப்பிக்கிறோம் என்றும் அந்த மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது. [தி]

---


கிழக்கு

சியாகவுள்ளது

மேலும் 1989 இல் பதவிக்கு வந்த ஜனாதிபதி பிரேமதாச இந்த அரசியலமைப்பின் மூலம் ஒரு சர்வாதிகாரியாக நடந்து கொண்டார். எதிர்க்கட்சிகள் அடக்கப்பட்டன, அமைச்சர்கள் மிரட்டப்பட்டனர். குண்டர் கூட்டங்களும் அமைப்பு ரீதியான துணை ராணுவப் படைகளும் சுதந்திரமாக நடமாட அனுமதிக்கப்பட்டன.

கட்சிக்குள்ளேயே விமர்சனங்கள் தடை செய்யப்பட்டன. பொலிஸ் பின்தொடர்ந்து தொலை பேசிகள் ஒட்டுக் கேட்கப்பட்டன, இவற்றை எல்லாம் தட்டிக் கேட்கக் கூடிய நிலையில் எவரும் இருக்கவில்லை. பாராளுமன்ற உறுப்பினர்கள் பேசமுடியாத நிலையில் இருந்தபோது பாராளுமன்ற சிறப்புரிமைகள் எதற்காக? பாராளுமன்றம் கூட செயற்படும் நிலையில் இருக்கவில்லை என்றார்.

---



15-06-1944

அநியாய அழிப்பு:

19-08-1989

திதி:

04-09-1993

## திரு. இராஜசிங்கம் (கிளி)

என்றும் எங்கள் உள்ளத்தில்
பாச சுடர்விடும் பாச விளக்கே!
உமது ஆத்ம சாந்திக்காக ஆண்டவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

'வளர்மதி வாசா'
கல்பொல்லை வீதி,
கரவெட்டி மேற்கு,
கரவெட்டி.

அன்பு மனைவி,
அருமை மகள், சகோதரர்கள்,
மைத்துனர் உற்றார்.
நண்பர்கள் (5837)

---

## நன்றி நவில்கின்றோம்



## வேலுப்பிள்ளை கிருஷ்ணன்

(5-07-93 மலேசியாவில் காலமானார்)

எங்கள் தெய்வம் எமைப் பிரிந்த காலை
பங்குகொண்டும் செய்திகள் தந்தும்
துயரந் தன்னிற் கலந்தோரான
மலாயா, ஈழ நாட்டினில் நன்றே
வாழும் உறவினர் அன்பர் தமக்கும்
திங்கள் ஒன்றில் திலதர்ப் பணத்தில்
பங்கு கொண்ட பண்போர் தமக்கும்
நெஞ்சிற் பொங்கும் நன்றி தந்தோம்.

ஆஸ்பத்திரி வீதி,
சங்கானை.
4-09-93

திருமதி வே. கிருஷ்ணன்
குடும்பத்தினர்.

(5835)

---

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் பத்திரா வீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 04ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.